உ

கடவுள் துணை.

# 'ஜாதக ராஜ "ஜீவன பாவம்"

என்னும்

# "சகலவிதமான தொழில் நிர்ணயம்"

## (சாயன ரீதியாய்ப் பார்க்க வேண்டியது)

மலர் **1.**

---

## ஜீவன பாவ விஷயங்களும் யோக விஷயங்களும்

இது சென்னை முத்தியாலுப்பேட்டை ஐ ஸ்கூலில் சைன்ஸ் உபாத்தியாயராயிருந்தவரும், கணித சாஸ்திரத்தில் பி. ஏ. பட்டம் வகித்தவரும், சுத்த திருக்கணித, வாக்கிய பஞ்சாங்க கணிதரும், இராஜ ஜோதிட கணிதம், ஜாதக கணிதம் ஒராம் பாகம் என்ற ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம், ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்ற ஜாதக பலாபலன்கள் நிர்ணயம், பல பாகக் கிரந்தங்களாகிய ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் ஒன்று, இரண்டு, ஜாதக லக்கின ஸ்புட பாவ ஸ்புட கணனம் இவைகளின் ஆசிரியரும், பிருஹத் ஜாதகத்தின் மொழி பொழிப்புரை ஆசிரியருமாகிய,

**C. G. ராஜன், B. A. (*Mathematics*)**

அவர்களால் ஆக்கப்பட்டது.

கிடைக்கும் இடம் :—சி. சுப்பிரமணியம் அண்டு பிரதர்ஸ்,
பப்ளிஷர், நெ. 36, ஆயலூர் முத்தையா முதலி தெரு,
சௌகார்ப்பேட்டை போஸ்டு, சென்னை.

*All Rights Reserved]* *1943* *[First Edition.*

உ

கடவுள் துணை.

# ஜாதக ராஜ "ஜீவன பாவம்"

என்னும்

# "சகலவிதமான தொழில் நிர்ணயம்"

## (சாயன ரீதியாய்ப் பார்க்க வேண்டியது)

மலர் **1.**

---

## ஜீவன பாவ விஷயங்களும் யோக விஷயங்களும்

---

# 1-வது அத்தியாயம்.

## ஜீவன பாவ விஷயங்கள்.

(மேல்நாட்டு ஜோதிட சாயனரீதியாய்ப் பாாக்க வேண்டியது)

அயிட்டம் நெ. **1-**

சாயன மதத்தில் கிரகங்களினுலுண்டாகும் ஜீவனுேபாயங்களை அடியிற் கண்டபடி சொல்லி இருக்கிறது. உலகத்திலுள்ள ஜீவனுேபாயங்கள் கணக்கிடக் கூடியவையல்ல என்பது அனேகருக்குத் தெரிந்த விஷயமே. "எண்ணறிய பிறவி" என்றதைப் போல "எண்ணறிய ஜீவனங்கள்" இருக்கின்றன. ஆகையால் ஒரு ஜாதகருக்குப் பலான பலான ஜீவனம் என்று ஸ்திரமாய்க் கண்டறிவது மிகவும் கஷ்டமானதா யிருக்கிறது. ஆயினும் அடியிற் கொடுத்துள்ள கிரகங்களினுலுண்டாகும் ஜீவனுேபாயத்தினுலும் ஜீவன நிர்ணய மார்க்கத்தினுலும் கூடியமட்டும் ஒரு ஜாதகருடைய ஜீவனம் (தொழில்) அல்லது பல ஜீவனங்கள் (பல தொழில்கள்) பலானது பலானவை என்று யூகித்தறியலாம்.

## கிரகங்களின் ஜீவனோபாயங்கள்.

அயிட்டம். நே. **2.**

**(1)** சூரியனாலுண்டாகும் ஜீவனங்கள்: அரசன், இராஜாங்கத் தொழில், இராஜ சபையில் தொழில், மானேஜர் என்னும் நிர்வகிக்கிறவன், அரசர் தோழன், ஆபரண வியாபாரி, இரத்தின வியாபாரி, தட்டான், பொன் முலாம் பூசுதல், பொதுநாயக ஜனசமூகங்களில் (Local Boards, *i.e.*, District Boards, Taluk Boards, Municipalities) அல்லது இராஜாங்கத்தில் கவர்த்தையான உத்தியோகம், அதிகாரம் செலுத்தும்படியான எவ்வித உத்தியோகமும், இராஜ குமாரர்கள், சக்கரவர்த்திகள், ஐகோர்ட்டு ஜஸ்டிஸ்கள் என்ற பெரிய நியாதிபதிகள், மாஜிஸ்ரேட்ஸ்கள் என்ற குற்றவாளிகளை விசாரிக்கும் நீதி விசாரணாதிபதிகள், பிரசிடென்சி மாஜிஸ்ரேட்டு, ஸ்டேஷனேரி மாஜிஸ்ரேட்டு, கிராம மாஜிஸ்ரேட்டு, போலீஸ் சூப்பரின்டென்டெண்டு, போலீஸ் கான்ஸ்டேபில்கள், தங்கசாலை நாணயசாலை அதிபதிகள், எக்சைஸ் டிபார்ட்டுமெண்டு அதிகாரிகள்.

**(2)** சந்திரனாலுண்டாகும் ஜீவனங்கள்:—ஜல சம்பந்தமான தொழில், செம்படத் தொழில், தேசாந்தரி, நீரூபகன், மாலுமி, கப்பலோட்டி, மது வழங்கும் பணிப்பெண், சேவகன், வண்ணார வேலை, செய்தியை விளம்பரம் செய்தல், போஜன சாமக்கிரியை அமைத்தல், பிரசவ மருத்துவம், ஜல ரூபமான அல்லது திரவ பதார்த்தமானவைகளில் வியாபாரஞ் செய்தல், ஜனக் கூட்டமான விடத்தில் தொழில், பொதுஜனங்கள் சம்பந்தமான தொழில் அதாவது கிரந்த கர்த்தா, பத்திரிகாதிகாரி, பொதுஜனக் கூட்டத்திற் பேசுந் தொழில், பவழ வியாபாரம், சாராயம் காய்ச்சும் தொழில், நான்குச் சக்கர வண்டி ஓட்டுகிற சாரதி, வேடுவன், சத்த குதிரை வண்டிக்காரன், நதிகள் முதலியவைகளைத் தாண்டிச் செல்ல படகு ஓட்டும் ஓடக்காரன், மீனம், கடகம், விருச்சிகம் இவைகளிலிருக்கும்போது சமுத்திர சம்பந்தமான அல்லது கப்பலுக்குரிய, அல்லது கப்பற் படைக்குரிய உத்தியோகம்.

**(3)** செவ்வாயினாலுண்டாகும் ஜீவனங்கள்:—போர் வீரத் தொழில், இரும்பு எஃகு முதலியவைகளிடத்தில் தொழில், இரண வைத்திய சிகிச்சைத் தொழில், சமையல் வேலை, இரஸாயன சாஸ்திரத் தொழில், மருந்து விற்றல், நாவிதத் தொழில், பல் (தந்த) வைத்தியத் தொழில், உலோகம், நெருப்பு, கூரான ஆயுதங்கள் ஆகிய இவைகளை உபயோகப்படுத்தும்படியான சர்வத் தொழில்

களும் வியாபாரங்களும், இராணுவத்தில் தொழில், யந்திரகாரன், (Engineer), யந்திரவித்தைத் தொழில் (Mechanics), கசாப்புக்காரத் தொழில், பூமி சம்மந்தமான தொழில் அதாவது விவசாயம், பூகோள சாஸ்திரம், பூவிவரணம் (Geography) பூகோள உறுப்பி லக்கணம் என்னும் பூதத்துவ சாஸ்திரம் (Geology), தாதுவித்தை (Mineralogy) ஆகிய இவை போன்ற பூமி சம்மந்தமானத் தொழில் கள், செவ்வாய் மீனம் அல்லது கடகத்திலிருக்கும்போது கடற் படையில் தொழில், பெயிலிப்பு, அமீனு, கெடியார வேலை, சாய வேலை, தையல் வேலை, தச்சவேலை, தோல் பதனிடும் வேலை.

(4) புதனுலுண்டாகும் ஜீவனங்கள் :—பள்ளிக்கூட உபாத்தி யாயர், போதகன், உபதேசி, கணக்கன், நூலாசிரியன், எழுதுகிற வன், குமஸ்தா, இலேககன், புத்தக வியாபாரி, பிரசுரிக்குங் கர்த்தா, (Editor), சுகதுக்கம் சேதி சொல்லுந் தொழில் (Postal Department), காரியதரிசி (Secretary), மொழிபெயர்ப்பவன் (Interpretor), கூலிக்குச் சுமக்கிறவன், தெய்வீகச் சம்பந்த மானவை, சாஸ்திர சம்மந்தமானவை, வைத்திய சம்மந்தமானவை பிரயாண சம்பந்தமானவை ஆகிய இந்தத் தொழில்கள், வர்த்த மானச் செய்திப் பத்திரிகைகள் சம்மந்தமானத் தொழில், கணித சாஸ்திரி (Mathematician), லாயர்கள், அச்சடிப்பவர்கள், இராஜ தூதன், வாசால பிரசங்கி, கமிஷனர் என்ற விசாரணுதிகாரி (Commissioner), வேலைக்காரன், காலாள், சாதாரண தூதன், தெய்வக்ஞர்கள் என்ற ஜோதிடர்கள்.

(5) குருவாலுண்டாகும் ஜீவனங்கள் :—வக்கீல்கள் என்ற லாயர்கள், ஜட்ஜிகள் என்ற நீதியதிபதிகள், புரோகிதர், அர்ச் சகர், கோயில் குருக்கள், டாக்டர்கள் என்ற வைத்தியர்கள், மந்தி ராலோசனைச் சபையினன் (Councillor), வட்டி வியாபாரி (Banker), பல சரக்கு வியாபாரம், ஜவுளி வியாபாரம், அதிக நம்பிக்கை தேவையான உத்தியோகங்கள் அதாவது கஜானு முதலியவை களில் உத்தியோகங்கள், தெய்வீகச் சம்மந்தமானவை, நியாய சட்ட சம்மந்தமானவை, தத்துவஞானம், வேதாந்தம், சித்தாந்தம் இவைகள் சம்மந்தமானவை (Philosophy), மந்திரிகள், குரு, புரோ கிதர், ஆச்சாரியர், மத விஷயமான பிரசங்கி, ஜவுளி வர்த்தக வியாபாரம், கம்பெனி வஸ்திர வியாபாரம், பிரகாச்சன் (சாஸ் திரி Professor).

(6) சுக்கிரனுலுண்டாகும் ஜீவனங்கள் :—புஷ்ப வியாபாரம், பரிமள, வாசனைத் திரவிய வியாபாரம், பெண்கள் சம்மந்தமான

வஸ்திர, ஆடை அலங்கிருத சாமான்கள், ஆபரணங்கள் முதலியன, வியாபாரம், மிட்டாய், ரொட்டி முதலிய வியாபாரம், சரிகை வேலை, சித்திரத் தையல் வேலை, சிங்காரித்துக் கொள்ளும் சகல ஆடை அணிகள் வியாபாரம், வர்ணச் சித்திர வேலை, கவிகள் கட்டும் புலவர் தொழில், இதர சித்திர வேலைத் தொழில்கள், சங்கீதம் சம்பந்தமானத் தொழில்கள், பெண்கள் சம்பந்தமான பலவிதத் தொழில்கள், பல சரக்கு வியாபாரம், பரிமள வாசனையுள்ள ரசமுள்ள வஸ்துக்கள் தைலங்கள் முதலியவைகள் வியாபாரம், சாராய வியாபாரம், உற்சாகமூட்டும் பான வியாபாரம் (an exhilarating drink), டாக்டர் உத்தியோகம், பாடகன், பட்டு நூல், பட்டுத் துணி வியாபாரம், ஜவுளி வியாபாரம், சணல் துணி வியாபாரம், நாடா முதலிய வியாபாரம், பிடில் வாசிக்குஞ் தொழில், புல்லாங்குழல் வாசிக்குந் தொழில், நாடகத் தொழில், கூத்தாடித் தொழில். வைடூரியம், ரவை, முதலிய நவரத்தினங்கள் வியாபாரம்.

**(7)** சனியினுலுண்டாகும் ஜீவனங்கள் :—சிற்பத்தொழில், நிலக்கரி வியாபாரம், ஜெயிலர் வேலை, நிலங்களையும் சொத்துகளையும் வாங்குதல் விற்றல் முதலிய தொழில், ஈய வேலை, உழைப்பாளித் தொழில் (Labourer), பிச்சை எடுக்குந் தொழில், பழம் பொருளாராயும் வேலை, புராதன சரித்திர சோதனை வேலை, சவக்குழி தோண்டும் வேலை, துறவி, கட்டிடங்கள் சம்பந்தமான வேலை, விவசாய வேலை, கொல்லத்து வேலை, கஷ்ட ஜீவனங்கள், உழைப்பு அதிகமாகவும் ஊதியம் கொஞ்சமாகவும் வரக் கூடிய சகலவிதமான கஷ்ட ஜீவனங்கள், பயிரிடுபவன், குயவன், தகர வேலைக்காரன், சுரங்க வேலைக்காரன், தோற்பதன் சாயமிடுவோன், வீதி பெருக்குகிறவன், தோட்டி, குப்பைக்காரன், வெட்டியான், குதிரைப் பாகன், மெழுக்கு வத்தி வியாபாரி, பசு எருமைகளை வைத்துக்கொண்டு வியாபாரஞ் செய்தல், இடையன், சாய வேலைக்காரன், குழி, அகழி, சுரங்கம் முதலியவைகளை வெட்டும் வேலைக்காரன், செருப்புதைக்குஞ் சக்கிலி, பப்பூன் என்ற விகட கவி, தோட்ட வேலைக்காரன்,

**(8)** யூரேனேஸ் என்ற ஒரு வெருங்கண்ணுக்குத் தெரியாத கிரகத்தினுலுண்டாகும் ஜீவனங்கள் :—தெய்வக்ஞன் என்ற ஜோதிஷன், ஆகாய விமானத்தில் செல்லுபவன், பழம் பொருள் ஆராயும் வேலைக்காரன், மின்சார சாஸ்திரி, வித்யுத் சாஸ்திரி, யந்திரக்காரன், புதியதாகக் கண்டு பிடிப்போன், புதியதாகக் கற்பனை

செய்பவன், வழிப் பிரயாணி, ஸ்தம்பனம் (யோக நித்திரை) செய்பவன், மோகன வித்தைக்காரன் (hypnotist), அபூர்வமான வழக்கமில்லாத காரியங்களைச் செய்பவன், வான சாஸ்திரி, இரஸாயன சாஸ்திரி, பூகோள உறுப்பிலக்கண சாஸ்திரி, கபால பரீட்சை செய்யும் சாமுத்திரிக சாஸ்திரி, போதனாசிரியர், சிற்பி, உருப்பிடிப்போன், தத்துவ விசாரகன் (Metaphysician), மாந்திரீகன்.

**(9)** நெப்த்யூன் என்ற ஒரு வெறுங்கண்ணுக்குத் தெரியாத கிரகத்தினுலுண்டாகும் ஜீவனங்கள் :—புகையிலை வியாபாரம், பருத்தி வியாபாரம், காப்பிக்கொட்டை, தேயிலை வியாபாரம், மருந்து வியாபாரம், தெய்வீகச் சம்பந்தமான, வைதீகச் சம்மந்தமானத் தொழில்கள்.

---

# 2-வது அத்தியாயம்.

---

## கிரகங்களின் முக்கியமான பார்வை.

அயிட்டம் நே. **3.**

இனி மேல் கிரகங்கள் ஒன்றுக்கொன்றைப் பார்த்துக் கொள்ளுதல் அல்லது ஒன்றுடன் மற்றொன்று சம்மந்தப்படுதல் ஆகிய இவைகளால் உண்டாகும் ஜீவனோபாயங்களை இனி கவனிப்போம். இதைக் கவனிப்பதற்கு முந்தி கிரகங்களின் பார்வை, சம்பந்தம் ஆகிய இவைகளைப் பற்றிய சில விஷயங்களை நாம் முந்தியாக அறிய வேண்டி இருக்கிறது.

*(1)* ஒரு கிரகம் மற்றொரு கிரகத்திற்கு *60* பாகைகள் தூரம் இருந்தால் இவ்விரண்டு கிரகங்களும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொள்ளுகின்றன. இந்தத் திருஷ்டிக்கு சட்கோணப் பார்வை (sextile aspect) என்று சொல்லுவோம்.

*(2)* ஒரு கிரகம் மற்றொரு கிரகததிற்கு *90* பாகைகள் தூரம் இருந்தால் இவ்விரண்டு கிரகங்களும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொள்ளுகின்றன. இந்தத் திருஷ்டிக்குச் நேர் கோண பார்வை என்ற சதுர்கோண பார்வை (Square aspect) என்று சொல்லுவோம்.

*(3)* ஒரு கிரகம் மற்றொரு கிரகத்திற்கு *120* பாகைகள் தூரம் இருந்தால் இவ்விரண்டு கிரகங்களும் ஒன்றை ஒன்று

பார்த்துக் கொள்ளுகின்றன. இந்தத் திருஷ்டிக்கு முக்கோணம் என்ற திரிகோண பார்வை (Triune aspect) என்று சொல்லுவோம்.

(4) ஒரு கிரகம் மற்றொரு கிரகத்திற்கு 180 பாகைகள் தூரம் இருந்தால் இவ்விரண்டு கிரகங்களும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொள்ளுகின்றன. இந்தத் திருஷ்டிக்கு எதிரிடைப் பார்வை (opposition) என்று சொல்லுவோம்.

(5) ஒரு கிரகம் மற்றொரு கிரகத்திற்குப் பூஜ்யம் பாகை தூரத்தில் (அதாவது இரண்டு கிரகங்களினுடைய ஸ்புடமும் சரியாய் ஒன்ருக) இருந்தால் இரண்டு கிரகங்களும் சமாகமப் பார்வை அடைந்திருத்தல் அல்லது சமாகமாய் இருத்தல் என்று சொல்லுவோம்.

## கிரகங்களின் விசேஷ பார்வையின் அளவு.

கிரகங்கள் மேலே சொல்லியபடி 60 பாகை, 90 பாகை, 120 பாகை, 180 பாகை தூரங்களில் பார்ப்பதுமன்றிக் கொஞ்சம் முந்திபிந்தியும் பார்ப்பதுண்டு. அதாவது சூரியன் 15 பாகை முந்தி பிந்தியும், சந்திரன் 12 பாகை முந்திபிந்தியும் மற்றக் கிரகங்களும் அடியிற் கண்டபடி முந்திபிந்தியும் பார்க்கும்.

### (6) விசேஷ பார்வையின் அளவு.

| கிரகங்கள் | முந்தி பிந்தி பார்க்கும் அளவு. * | கிரகங்கள் - முந்தி பிந்தி பார்க்கும் அளவு * | |
|---|---|---|---|
| சூரியன் | 15 பாகை | சுக்கிரன் | 7 பாகை |
| சந்திரன் | 12 ,, | சனி | 9 ,, |
| செவ்வாய் | 7 ,, | யூரெனெஸ் | 7 ,, |
| புதன் | 7 ,, | நெப்த்தியூன் | 5 ,, |
| குரு | 9 ,, | | |

* குறிப்பு :—இந்த அளவு தோராயமானது. பல புத்தகங்களில் பலவிதமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றதென்று அறியவும்.

சூரியன் 15 பாகை முந்தி பிந்தியும் பார்ப்பது என்று மேலே சொன்னோம். கிரகங்களுக்குச் சட்கோணப் பார்வை 60 பாகை என்று சொன்னோம். சூரியன் 15 பாகை முந்தி பிந்தி பார்ப்பதால் இந்த 15 பாகையை 60 பாகைக்கு முந்திபிந்தி கணக்கிட 45

பாகையும், 75 பாகையும் வரும். அதாவது சூரியனுடைய சட்கோணப் பார்வை 45 பாகை முதல் 75 பாகை வரையிலும் என்று ஏற்படும். இவ்விதமாகவே எல்லாக் கிரகங்களுக்கும் சட்கோணப் பார்வை, சதுர்கோணப் பார்வை, திரிகோணப் பார்வை, எதிரிடப் பார்வை, சமாகமப் பார்வை அடியிற்கண்டபடி ஆகும்.

(7)

| கிரகங்கள் | 60° சட்கோணப் பார்வை பாகை | | 90° சதுர்கோணப் பார்வை பாகை | | 120° திரிகோணப் பார்வை பாகை | | 180° எதிரிடைப் பார்வை பாகை | | 0° or 360° சமாகமப் பார்வை பாகை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முதல் | வரை | முதல் | வரை | முதல் | வரை | முதல் | வரை | முதல் | வரை |
| சூரியன் | 45 | 75 | 75 | 105 | 105 | 135 | 165 | 195 | 345 | 15 |
| சந்திரன் | 48 | 72 | 78 | 102 | 108 | 132 | 168 | 192 | 348 | 12 |
| செவ்வாய் | 53 | 67 | 83 | 97 | 113 | 127 | 173 | 187 | 353 | 7 |
| புதன் | 53 | 67 | 83 | 97 | 113 | 127 | 173 | 187 | 353 | 7 |
| குரு | 51 | 69 | 81 | 99 | 111 | 129 | 171 | 189 | 351 | 9 |
| சுக்கிரன் | 53 | 67 | 83 | 97 | 113 | 127 | 173 | 187 | 353 | 7 |
| சனி | 51 | 69 | 81 | 99 | 111 | 129 | 171 | 189 | 351 | 9 |
| யூரேனெஸ் | 53 | 67 | 83 | 97 | 113 | 127 | 173 | 187 | 353 | 7 |
| நெப்த்யூன் | 55 | 65 | 85 | 95 | 115 | 125 | 175 | 185 | 355 | 5 |

குறிப்பு:—(1) அயிட்டம் நெ. 3. (6)ல் கிரகங்களுக்குக் கொடுத்துள்ள முந்திபிந்தி பார்வையின் அளவைக் கியாபகத்தில் வைத்துக்கொண்டால் அயிட்டம் நெ. 3. (7)-ல் கொடுத்துள்ள தொகைகளை மனப்பாடமாக அப்போதுக்கப்போது கணித்துக் கொள்ளலாம் அதாவது பார்வையின் தூரங்களாகிய 60, 90, 120, 180, பூஜ்யம் பாகை இவைகளிலிருந்து கிரகங்களின் விசேஷ பார்வை அளவைக் கழிக்க அல்லது அவைகளுடன் கூட்டக் கிரகங்களின் நிகர பார்வையின் ஆரம்பமும் முடிவும் அயிட்டம் நெ. 3. (7)-ல் கொடுத்துள்ளபடி வரும்.

குறிப்பு:—(2) சூரியனுக்கும் ஒரு கிரகத்திற்கும் உள்ள தூரம் 75 பாகையாய் இருக்கும்போது சட்கோணப் பார்வையை எடுத்துக் கொள்ளவும். சூரியனுக்கும் ஒரு கிரகத்திற்கும் உள்ள தூரம் 105 பாகையாய் இருக்கும்போது சதுர்கோணப் பார்வையை விட்டுவிட்டுத் திரிகோணப் பார்வையை எடுத்துக் கொள்ளவும்.

## கிரகங்களின் பார்வைகளின் பலம்.

அயிட்டம் நெ. 4.

(1) கிரகங்களின் பார்வையின் பலத்தின் அளவை அறிவதற்கு முந்தி இந்த மதம் பிரகாரம் சுபக்கிரகங்களும் பாபக் கிரகங்களும் எவை என்று அறிய வேண்டு. இந்த மதம் பிரகாரம் குரு, சுக்கிரன், சூரியன் இவர்கள் சுபக்கிரகங்கள், சனி, செவ்வாய், யூரேனெஸ், நெப்த்யூன் இவர்கள் பாபிகள், சந்திரனும், புதனும் மேற்சொல்லிய சுபர்களால் பார்க்கப்பட்டால் சுபர்கள், மேற் சொல்லிய பாபிகளால் பார்க்கப்பட்டால் பாபிகளாக மாறி விடுகின்றார்கள்.

(2) பார்வைகள் இந்த மதத்தில் சுபபார்வைகள் என்றும் அசுப பார்வைகள் என்றும் இரண்டு வகைப்படும். சுபக் கிரகங்கள் கூட அசுப (கெட்ட) பார்வையுடன் பார்த்தால் கெடுதியைச் செய்கின்றன, அசுப கிரகங்கள் கூட சுப (நல்ல) பார்வையுடன் பார்த்தால் நல்ல பலனைக் கொடுக்கின்றன. சுபக்கிரகங்கள் நல்ல பார்வையுடன் பார்த்தால் அதிக நல்ல பலனைக் கொடுக்கின்றன. அசுபக் கிரகங்கள் கெட்ட பார்வையுடன் பார்த்தால் அதிக கெட்ட பலனைக் கொடுக்கின்றன. [குறிப்பு:—இந்த மதம் என்பது (சாயன மதம் என்ற) மேல்நாட்டுச் சாயனரீதியாய்ப் பார்க்கும் மதம் ஆகும். இது இந்தச் சாயன மதத்திற்கும் இந்து ஜோதிட சாஸ்திர நிரயன மதத்திற்கும் உள்ள ஒரு வித்தியாசமாகும்.]

(3) ஒரு கிரகம் மற்றொரு கிரகத்திலிருந்து 60 பாகை தூரத்தில் இருந்தால் அப்போது சட்கோண பார்வை உண்டாகிறது என்று முந்தி சொல்லி இருக்கிறோம். மேலும் விசேஷ பார்வையைப் பற்றி அயிட்டம் நெ. 3. (6)-ல், சூரியன் 15 பாகை முந்திபிந்தி பார்க்கிறது என்று சொல்லி இருக்கிறோம். அதாவது சூரியனுடைய நிகர பார்வை 60 பாகைக்கு முந்தி 15 பாகை தூரமும் 60 பாகைக்குப் பிந்தி 15 பாகையும் உண்டு. அதாவது சூரியனுக்கு நிகர பார்வை பாகை 45 முதல் பாகை 75 வரையிலும் அயிட்டம் நெ 3. (7)-ல் சொல்லியபடி உண்டு. சூரியன் ஒரு கிரகத்திலிருந்து 45 பாகை தூரத்திலிருக்கும்போது அந்தக் கிரகத்தின் பேரில் சூரியனுடைய பார்வை ஆரம்பிக்கின்றது, பிறகு சூரியனுக்கும் அந்தக் கிரகத்திற்கும் உள்ள தூரம் 45 பாகைக்கு மேல் 60-வது பாகை வரைக்கும் அதிகப்பட்டுக்கொண்டே வர வர சூரியனுடைய பார்வையின் பலத்தின் அளவு அதிகப்பட்டுக் கொண்டே வருகிறது, பிறகு இடையிலுள்ள தூரம் 60 பாகை

யாக வரும்போது பார்வையின் பலத்தின் அளவு அதனுடைய அதிக அளவை அடைகிறது. அதாவது மிகவும் அதிகமாகிறது. பிறகு தூரம் 60 பாகைக்கு மேற்பட மேற்பட பார்வையின் அளவு குறைந்துகொண்டே வந்து கடைசியில் தூரம் 75 பாகை யாகும்போது பார்வையின் அளவு பூஜ்யமாகி விடுகிறது. இவ்வித மாகவே எல்லாக் கிரகங்களுக்கும் சட்கோண பார்வையாகிய 60-வது பாகையிலும், சதுர்கோணப் பார்வையாகிய 90-வது பாகையிலும், திரிகோண பார்வையாகிய 120 வது பாகையிலும், எதிரிடை பார்வையாகிய 180-வது பாகையிலும், சமாகம பார்வை யாகிய பூஜ்யம் பாகையிலும் பார்வையின் அளவு அதனுடைய அதிக அளவை அடைந்து பிறகு குறைந்துகொண்டே வந்து இந்தப் பலவித கோணப் பார்வைகளும் அயிட்டம். நெ. 3. (7)-ல் அந்தந்த கோணப் பார்வைக்குக் கீழ் கொடுத்துள்ள "முதல்" "வரை" என்ற தலைப்பின் கீழ் கண்டுள்ள பாகையை அடையும் போது பார்வையின் பலத்தின் அளவு பூஜ்யத்தை யடைகிறது. உதாரணமாகச் சூரியனுக்கு சட்கோணப் பார்வை 45-வது பாகையில் பூஜ்யம், 60-வது பாகையில் மிகவும் அதிகம், 75-வது பாகையில் பூஜ்யம் ஆகும். சூரியனுக்குச் சதுர்கோணப் பார்வை 75-வது பாகையில் பூஜ்யம், 90-வது பாகையில் மிகவும் அதிகம், 105-வது பாகையில் பூஜ்யம் ஆகும். சூரியனுக்குத் திரிகோணப் பார்வையில் 105-வது பாகையில் பூஜ்யம், 120-வது பாகையில் மிகவும் அதிகம், 135-வது பாகையில் பூஜ்யம் ஆகும். சூரியனுக்கு எதிரிடைப் பார்வையில் 165-வது பாகையில் பூஜ்யம், 180-வது பாகையில் மிகவும் அதிகம், 195-வது பாகையில் பூஜ்யம் ஆகும். சூரியனுக்குச் சமாகம பார்வையில் 345-வது பாகையில் பூஜ்யமும் 360-வது என்ற பூஜ்யம் பாகையில் மிகவும் அதிகமும், 15-வது பாகையில் பூஜ்யமும் ஆகும். இவ்விதமாகவே மற்றெல்லாக் கிரகங் களுக்கும் பார்வையின் பலத்தின் அளவை அறிந்து கொள்ளவும்.

(4) கிரகங்கள் சவ்வியமாகவும், அவசவ்வியமாகவும் அதா வது தமக்கு முந்தியும் பிந்தியும் பார்க்கும். உதாரணமாகச் சூரி யன் சட்கோணப் பார்வையில் தனக்கு முன்னே 45 பாகை முதல் 75 பாகை வரையிலும் தூரத்திலுள்ளக் கிரகத்தைப் பார்க்கும், இதற்குச் சவ்விய பார்வை என்று பெயர். சூரியன் சட்கோணப் பார்வையில் தனக்குப் பின்னே 45 பாகை முதல் 75 பாகை வரை யிலும் தூரத்திலுள்ளக் கிரகத்தைப் பார்க்கும், இதற்கு அவசவ் விய பார்வை என்று பெயர். இவ்விதமாகவே எல்லாக் கிரகங் களும் எல்லாவித (எல்லாக் கோணப்பார்வை, எதிரிடை பார்வை,

சமாகம பார்வை என்ற) பார்வைகளிலும் சவ்வியமாகவும் அவ சவ்வியமாகவும் பார்க்கும். உதாரணமாகச் சூரியனுடைய ஸ்புடம் 80 பாகையும், சனியினுடைய ஸ்புடம் 130 பாகையும், குருவினுடைய ஸ்புடம் 25 பாகையுமானுல், சூரியனுக்கும் குருவுக்கும் இடையில் தூரம் 55 (80-25) பாகையாக இருப்பதால் சூரியன் குருவை சட்கோணப் பார்வையுடன் பார்க்கிறது. இவ்விதமாகவே சூரியனுக்கும் சனிக்கும் இடையில் தூரம் 50 (130-80) பாகையாக இருப்பதால் சூரியன் சனியைச் சட்கோணப் பார்வையுடன் பார்க்கின்றது. சனி, சூரியனுக்கு முன்னே (அதாவது சவ்வியமாக) இருப்பதால் சூரியன் சனியைச் சவ்விய சட்கோணப் பார்வையாகப் பார்க்கிறது. மேலும் குரு சூரியனுக்குப் பின்னே (அதாவது அவசவ்வியமாக) இருப்பதால் சூரியன் குருவை அவ சவ்விய சட்கோணப் பார்வையாகப் பார்க்கிறது. இவ்விதமாகவே எல்லாக் கிரகங்களுக்கும் எல்லாவித பார்வைகளுக்கும் சவ்வியப் பார்வை, அவசவ்வியப் பார்வை என்று அறியவும்.

**அயிட்டம் நெ. 5. கிரகங்களின் சுப அசுப பார்வைகள் :—**

(1) சுப பார்வைகள் :—எல்லாக் கிரகங்களுக்கும் சட் கோணப் பார்வையும், திரிகோணப் பார்வையும் சுப (நல்ல) பார்வைகள். திரிகோணப் பார்வை என்பது சட்கோணப் பார்வையைவிட அதிக சுபகரமானது.

(2) அசுப பார்வைகள் :—எல்லாக் கிரகங்களுக்கும் சதுர் கோணப் பார்வையும் எதிரிடைப் பார்வையும் அசுப (கெட்ட) பார்வைகள். எதிரிடைப் பார்வை என்பது சதுர்கோணப் பார்வையைவிட அதிக கெட்டது. (சிலர் சதுர்கோணப் பார்வை எதிரிடைப் பார்வையைவிட மிகவும் கெட்டது என்பர்.)

(3) சமாகம பார்வை :—சுபக் கிரகங்களுக்குள் நேரிடும் சமாகமப் பார்வை சுப பார்வையாகும். அசுபக் கிரகங்களுக்குள் நேரிடும் சமாகமப் பார்வை அசுப பார்வையாகும். சூரியன், சந்திரன், புதன் இவர்களில் ஒருவர் சனி அல்லது செவ்வாய் ஆகிய இவர்களில் ஒருவருடன் சமாகமப் பார்வை அடைந்தால் இந்தப் பார்வை கெட்ட பார்வையாகும். மற்றச் சுபக்கிரகங்கள் மற்ற அசுபக் கிரகங்களுடன் சமாகமப் பார்வை பெற்ருல் இந்தப் பார்வை சுபா அசுப பார்வை கலந்தப் பார்வையாகிய மிஸ்ர பார்வையாகும்.

(4) சூரியன், சந்திரன் ஆகிய இவர்களில் ஒருவர் குருவுடன் அடையும் எதிரிடை பார்வையானது செவ்வாய் அல்லது சனி

யுடன் அடையும் எதிரிடை பார்வையைவிட கொஞ்சம் கெட்ட பார்வையாகும்.

(5) சுபா அசுப பார்வைகள் எல்லாவற்றிலும் சமாகமப் பார்வையும் எதிரிடைப் பார்வையும் மிகவும் வலிவான பார்வைகள், அதாவது இவ்விரண்டு பார்வைகளும், சட்கோணப் பார்வை, சதுர்கோணப் பார்வை, திரிகோணப் பார்வை ஆகிய இப்பார்வைகளைவிட அதிக வலிவான பார்வைகள் ஆகும்.

(6) இரண்டிற்கு மேற்பட்ட கிரகங்கள் தங்களுக்குள் சமாகமப் பார்வையை அடையும்போது அவர்களுடைய பலாபலன்களை ஊகித்து அறிவது மிகவும் கஷ்டமானது என்று அறியவும். ஆகையால் அவர்களுடைய பலாபலன்களை வெகு ஜாக்கிரதையாக அறிய வேணும்.

(7) லக்கின பாவம் முதலிய துவாதச பாவங்களுக்குக் கிரகங்களால் உண்டாகும் பார்வையைக் கவனிக்கும்போது இப் பாவங்களைப் பார்க்கப்படுகின்ற கிரகமாகப் பாவித்து சுபா அசுப பார்வையை அறியவேணும். பாவங்கள் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று பார்த்துக் கொள்ளாது. பாவங்கள் கிரகங்களைப் பார்ப்பதில்லை.

---

# 3-வது அத்தியாயம்.

—o—

அயிட்டம். நே. 6: சில முக்கியமான விஷயங்கள் :—

(1) கிழக்குப் பாகம், மேற்குப் பாகம் என்பவை :-பவன (இராசி)ச்சக்கிரத்தை இரண்டு பாகமாகப் பங்கிட வருவத்தில் கிழக்குப் பக்கம் உள்ள பாகத்திற்குக் கிழக்குப் பாகம் என்று சொல்லுவோம். மேற்குப் பக்கம் உள்ள பாகத்திற்கு மேற்குப் பாகம் என்று சொல்லுவோம். உச்சியும் பாதாளமும் இரண்டு சமபாகமாகப் பிரிக்கும் இடங்கள். உச்சி (Mid-Heaven) என்பது பத்தாம் பாவத்திலிருக்கிறது. பாதாளம் என்பது நான்காம் பாவத்திலிருக்கிறது. (இந்து ஜோதிட சாஸ்திரத்தில் உச்சி (Very nearly middle of the tenth bhava) என்பது பத்தாம் பாவத்தின் மத்திய ஸ்புடமும் ஆகும். மேல் நாட்டு ஜோதிட சாஸ்திரத்தில் உச்சி (cusp of the tenth house) என்பது மேல்நாட்டு பத்தாம் பாவத்தின் ஆரம்ப ஸ்புடமும் பாதாளம் என்பது மேல்நாட்டு நான்காம்

பாவத்தின் ஆரம்ப ஸ்புடமும் ஆகும். ஆனால் இந்த இரண்டு ஜோதிட சாஸ்திரத்திலும் உச்சி என்பது ஒரே ஒரு இடந்தான், பாதாளம் என்பதும் ஒரே ஒரு இடந்தான்.) உச்சிக்கும் பாதாளத்திற்கும் கிழக்குப் பக்கமாயுள்ள பாவச் சக்கிரத்தின் அரை பாகத்திற்குக் கிழக்கு பாகம் (oriental) என்றும் மேற்குப் பக்கமாயுள்ள மற்ற அரை பாகத்திற்கு மேற்கு பாகம் (occidental) என்றும் சொல்லுவோம். ஆகையால் கிழக்குப் பாகம் என்பது இந்து ஜோதிட சாஸ்திரத்தில் இந்து பாவச் சக்கிரத்தில் பத்தாம் பாவத்தின் கிழக்கு (அதாவது 11-ம் பாவம் பக்கமாயும் உச்சிக்குக் கிழக்காயும் இருக்கிற அரைபாவமும், 11-ம் பாவமும், 12-ம் பாவமும், ஓராம் பாவமும், 2-ம் பாவமும் 3-ம் பாவமும் 4-ம் பாவத்தின் முதல் அரை பாவமும் ஆகும். மேற்கு பாகம் என்பது இந்து ஜோதிட சாஸ்திரத்தில் இந்து பாவச் சக்கிரத்தில் பத்தாம் பாவத்தின் மேற்கு (அதாவது 9-ம் பாவம் பக்கமாயும் உச்சிக்கு மேற்காயும் இருக்கிற) அரைபாகமும், 9-ம் பாவமும், 8-ம் பாவமும், 7-ம் பாவமும். 6-ம் பாவமும், 5-ம் பாவமும், 4-ம் பாவத்தின் பின் அரைபாகமும் ஆகும். மேல்நாட்டு ஜோதிடத்தில் கிழக்குப் பாகம் என்பது மேல்நாட்டு பாவச் சக்கிரத்தில் 10, 11, 12, 1. 2, 3-ம் பாவங்கள் ஆகும். மேற்குப் பாகம் என்பது மேல்நாட்டுப் பாவச் சக்கிரத்தில் 4, 5, 6, 7, 8, 9-ம் பாவங்கள் ஆகும். மேலும் இது வரையிலும் சொல்லி வந்த கிழக்குப் பாகம் மேற்குப் பாகம் என்றவை உச்சி, பாதாளம் ரீதியாய், (அதாவது 10, 4-வது பாவ ஸ்புடத்திற்கு)க் கிழக்கு பாகம் மேற்குப் பாகம் ஆகும். பாவ ரீதியாய்க் கிழக்குப் பாகம் மேற்குப் பாகம் இருப்பதுபோலவே ஒவ்வொரு கிரக ரீதியாயும் கிழக்குப் பாகம் மேற்குப் பாகம் என்றவை உண்டு. அதாவது தோராயமாய் ஒரு கிரகத்திற்கு 10-வது, 11-வது, 12-வது, 1-வது, 2-வது, 3-வது இராசிகள் இருக்கும் பாகத்திற்கு அந்தக் கிரக ரீதியாய் அந்தக் கிரகத்தின் கிழக்கு பாகம் என்றும், தோராயமாய் அந்தக் கிரகத்தின் 4-வது, 5-வது, 6-வது. 7-வது, 8-வது, 9-வது இராசிகள் இருக்கும் பாகத்திற்கு அந்தக் கிரக ரீதியாய் அந்தக் கிரகத்தின் கிழக்குப் பாகம் என்றும் சொல்லப்படும். ஒரு கிரகத்தைக் குறிப்பிடாமல் பொதுவாய்க் கிழக்கு பாகம் அல்லது மேற்கு பாகம் என்று சொன்னால் அந்த பாகம் லக்கின ரீதியான பாகம் என்றே எப்போதும் கருத வேண்டும். அதாவது உச்சிக்கும் பாதாளத்திற்கும் கிழக்காயுள்ள பாகம் கிழக்குப் பாகம் என்றும் மேற்காயுள்ள பாகம் மேற்குப் பாகம் என்றும் பாவிக்க வேண்டும்.

(2) லக்கின ஸ்புடம் முதல் 7-வது பாவ ஸ்புடம் வரையிலு முள்ள பாவங்கள் (அதாவது மேல்நாட்டு 1, 2, 3. 4, 5, 6-வது பாவங்கள்) பூமிக்குக் கீழேயுள்ள பாவங்களாகும். 7-வது பாவ ஸ்புடம் முதல் லக்கின ஸ்புடம் வரையிலுமுள்ள பாவங்கள் (அதா வது மேல்நாட்டு 7, 8, 9, 10, 11, 12-வது பாவங்கள்) பூமிக்கு மேலேயுள்ள பாவங்களாகும். ஒரு கிரகம் பூமிக்கு மேலேயுள்ள பாவங்களில் இருந்தால் அக்கிரகம் ஆகாயத்திலிருப்பதாகவும், பூமிக்குக் கீழேயுள்ள பாவங்களில் இருந்தால் பாதாளத்தில் இருப்பதாகவும் கருதப்படும்.

(3) இரண்டு கிரகங்களில் எந்தக் கிரகம் பத்தாம் பாவ ஸ்புடத்திற்கு அருகிலிருக்கிறதோ அந்தக் கிரகம் மற்றொரு கிர கத்தைவிட உச்சிக்கு அருகில் இருப்பதாகக் கருதப்படும்.

(4) பத்தாம் பாவத்தின் ஸ்புடத்திற்கு (அதாவது இந்து ஜோதிட சாஸ்திரத்தில் 10-ம் பாவத்தின் மத்திம ஸ்புடத்திற்கு, மேல் நாட்டு ஜோதிட சாஸ்திரத்தில் 10-ம் பாவ ஆரம்ப ஸ்புடத் திற்கு (cusp of the tenth house) உச்சி என்றும் அல்லது இப்புத்த கத்தின் பொருட்டாக "பத்தாம் பாவ இருதயம்" என்றும் கற்பனைப் பெயராக இனிச் சொல்லுவோம்.

**அயிட்டம் நெ. 7: ஜீவனோபாய நிர்ணயம் :—**

இந்த மதத்தில் இனிச் சொல்லப் போகும் பாவங்கள் எல் லாம் மேல்நாட்டு சாயன ரீதியான பாவச் சக்கரத்தின் பாவங்கள் என்று பாவிக்க வேணும் அதாவது சாயன ரீதியான பாவம் என் றும் அல்லது நிரயன ரீதியான பாவம் என்றும் விவரமாய்ச் சொல் லாமல் பொதுவாய் பாவம் (அதாவது உதாரணமாக 1-வது பாவம் 2-வது பாவம்...10-வது பாவம், 12- பாவம்) என்று சொல்லிய போதுகூட இங்கு குறிக்கும் பாவம் சாயன பாவச் சக்கிர ரீதியான பாவம் அதாவது சாயன பாவம் என்றே கருதவேணும்.

சாயன ரீதியாய் பாவச் சக்கிரம் போடும் வழி:—பாவச் சக்கி ரம் போடும் வழியை என்னுடைய ஜாதக கணிதம் ஓராம் பாகம் என்னும் ஜோதிட கிரகசட்பலம் அயுள் கணிதம் என்ற புத்தகத் திலும் ஜாதக லக்கின ஸ்புடபாவ ஸ்புடகணனம் என்ற புத்தகத் திலும் கொடுத்திருக்கிறது. இந்த வழியைப் பார்க்கவும். ஜாதக கணிதம் ஓராம் பாவம் என்ற புத்தகத்தில் 1-வது அத்தியாயத்தில் "7-வது கட்டம்" என்பதற்குப் பின்னால் "8-பாவச் சக்கிரம் போட" என்பதின் கீழ் கொடுத்துள்ள கட்டத்தைப் பார்க்கவும். இதில் கொடுத்துள்ள பாவம் சாயன பாவங்கள் ஆகும். அதாவது

சாயன 1-வது பாவம் 184 பாகை - 48 கலை முதல் 214 பாகை-58 கலை வரையிலும் ஆகும். 2-வது சாயன பாவம் 214 பாகை-58கலை முதல் 245 பாகை-8 கலைவரையிலும் ஆகும், 11-வது சாயன பாவம் 125 பாகை - 8 கலை முதல் 154 பாகை-58 கலை வரையிலும் ஆகும், 12-வது சாயனபாவம் 154 பாகை - 58 கலைமுதல் 184 பாகை - 48 கலை வரையிலும் ஆகும். அதாவது இந்தக் கட்டத்தில் ஒவ்வொரு பாவத்திற்கும் எதிரில் கொடுத்துள்ள ஸ்புடம் அந்த பாவத்தின் ஆரம்ப ஸ்புடமும் முந்திய பாவத்தின் முடிவு ஸ்புடமும் ஆகும். இவ்விதமாக மேற்கண்ட ஜாதக கணிதம் ஓராம் பாவம் என்ற என்னுடைய புத்தகத்திலிருந்து சாயன பாவங்களை அறிந்து கொள்ளலாம். மேலும் என்னுடைய ஜாதக லக்கின ஸ்புட பாவ ஸ்புடகணனம் என்ற புத்தகத்தில் "ஏ" பாகத்தில் அயிட்டம் நெ. 21-ன் கடைசியிலும், அயிட்டம் நெ. 22-ன் முந்தியும் கொடுத்துள்ள கட்டத்தைப் பார்க்கவும், இந்தக் கட்டந்தான் சாயன பாவச் சக்கிரம் ஆகும். இவ்விதமாகவும் சாயன பாவங்களை அறிந்து கொள்ளலாம்.

இந்த மதத்தில் ஜாதகனுடைய தொழில், எஜமானன், நற்கீர்த்தி, பெருமை, அதிகாரம், வியாபாரம், பொறுப்பு, கௌரவம், கண்ணியம், நாணயம். செல்வாக்கு, அபகீர்த்தி ஆகிய இவைகளைப் பத்தாம் பாவத்தினுலும், சேவகம், தனக்குக் கீழ்பட்ட உத்தியோகஸ்தர்கள் தனது வேலையாட்கள் ஆகிய இவைகளையும் பத்தாம் பாவத்தினுலேயே அறிய வேணும்.

(1) ஒரு ஜாதகருடைய ஜீவனோபாயம் அறியவேண்டுமானுல் அடியிற் கண்டவைகளைக் கவனிக்க வேணும்.

(எ) பத்தாம் பாவம், ஆறும் பாவம் இவைகள் இருக்கும் படியான இராசிகள் எவ்விதமானவை என்று கவனிக்க வேணும்.

(பி) பத்தாம் பாவாதிபதி ஆறும் பாவாதிபதி இவர்களையும், இவர்களுடைய நிலையையும் இவர்களைப் பார்ப்பவர்களையும், இவர்களுடன் சம்மந்தப்பட்டவர்களையும் கவனிக்க வேணும்.

(2) சூரியன் இருக்கின்ற பாவம், இராசி, சூரியனைப் பார்க்குங் கிரகங்கள், சூரியனுடன் சம்மந்தப்பட்டக் கிரகங்கள் ஆகிய இவைகளைக் கவனிக்க வேணும்.

(4) சூரியனுக்கு மிகவும் அருகாமையில் உள்ள கிரகத்தைக் கவனிக்க வேணும். பலக் கிரகங்களில் எந்தக் கிரகம் சூரியனுக்கு அருகில் உள்ளது என்பதை கிரக ஸ்புட ரீதியாயும் கிராந்தி ரீதி

யாயும் பார்க்கவும். முதலில் ஸ்புட ரீதியாய்ப் பார்த்துக்கொண்டு பிரகு கிராந்தி ரீதியாய்ப் பார்க்கவும். சூரியனுக்கு ஓரே ராசியில் அல்லது அடுத்த ராசிகளில் இருக்கும் பலக் கிரகங்களில் கிராந்தி ரீதியாய் அருகில் உள்ள கிரகம் மிகவும் அருகிலுள்ளதாகும்.

(இ) சூரியனுக்கு அருகிலுள்ள கிரகங்களில் எந்தக் கிரகம் சூரியனுக்கு முன்னே உதயம் ஆகிறதோ அந்தக் கிரகம் முக்கிய மானது. சூரியனுக்கு அருகில் இரண்டு கிரகங்கள் இருந்து இவ் விரண்டில் ஒன்று சூரியனுக்கு முந்தியும், மற்றொன்று சூரியனுக் குப் பிந்தியும் இருந்தால் எந்த கிரகம் சூரியன் உதையமாவதற்கு முந்தி உதையமாகிறதோ அந்தக் கிரகம் முக்கியமானது. பெரும் பாலும் எந்தக் கிரகத்திற்கு ஸ்புடம் சூரியனுடைய ஸ்புடத்தை விட கொஞ்சமாக இருக்கிறதோ அந்தக் கிரகம் சூரியனுக்கு முன்னே உதயமாகும், எந்தக் கிரகத்திற்கு ஸ்புடம் சூரியனுடைய ஸ்புடத்தைவிட அதிகமாக விருக்கிறதோ அந்தக் கிரகம் பெரும் பாலும் சூரியனுக்குப் பின்னால் உதையமாகும்.

(எப்) சந்திரனை எந்தக் கிரகம் வலிவானப் பார்வையுடன் பார்க்கின்றதோ அந்தக் கிரகத்தைக் கவனிக்கவும். சந்திரனுடன் சம்பந்தப்பட்ட கிரகங்களில் எந்தக் கிரகம் வலிவாகவும் வலிவான சமாகம பார்வையுடனும் இருக்கிறதோ அதையும் கவனிக்கவும்.

(ஜி) பத்தாம் பாவத்தில் இருக்கப்பட்ட கிரகத்தைக் கவ னிக்கவும். பத்தாம் பாவத்தில் பல கிரகங்கள் இருந்தால் பத்தாம் பாவ இருதயத்திற்கு அருகிலுள்ள கிரகத்தைக் கவனிக்கவும்.

(எச்) பத்தாம் பாவத்தைப் பார்க்குங் கிரகங்களையும் கவனிக்கவும்.

(ஐ) பூரா ஜாதகத்திலும் மொத்தத்தில் எந்தக் கிரகங்கள் மிகவும் வலிவாய் இருக்கின்றதோ அந்தக் கிரகத்தையும் கவனிக்கவும்.

(2) மேலே சொல்லியவைகளில் பத்தாம் பாவாதிபதி, ஆரும் பாவாதிபதி, லக்கினம், லக்கின பாவாதிபதி, சூரியன், சந்தி ரன், புதன் ஆகிய இவைகள் ஒருவனுடைய ஜீவனோபாயத்தை நிர்ணயிக்க முக்கியமானவை.

ஜீவனத்தை நிர்ணயிக்கிற கிரக விதிகள் நான்கு :—

(3) 1-வது விதி. மேலும் மேலே சொல்லியவைகளில் (1) சூரியன், (2) பத்தாம் பாவ இருதயத்தில் உள்ள கிரகம், (3) சூரியனுக்குச் சமீபத்தில் இருந்துகொண்டு சூரியனுக்கு முன்னே

உதையமாகிச் சந்திரனுல் பார்க்கப்பட்ட அல்லது பார்க்கப்படாத கிரகம் ஆகிய இவைகள் ஜீவனத்தை நிர்ணயிக்கின்ற முக்கியமான கிரகங்கள். சூரியனுக்கு அருகில் இருந்துகொண்டு சூரியனுக்கு முன்னே உதையமாகிச் சந்திரனுல் பார்க்கப்படாத கிரகத்தைவிட சந்திரனுல் பார்க்கப்பட்ட கிரகம் முக்கியமானது.

(4) 2-வது விதி :-ஒரே கிரகமானது பத்தாம் பாவ இருதயத்தில் இருந்துகொண்டு சூரியனுக்கு அருகில் இருந்துகொண்டு சூரியனுக்கு முன்னே உதையமானுல் அந்தக் கிரகம் மற்ற எல்லாக் கிரகங்களையும்விட ஜீவனுேபாயத்தை நிர்ணயிப்பதில் முக்கியமானது. இந்தக் கிரகம் தனக்குரிய ஜீவனத்தைக் கொடுக்கும்.

(5) 3-வது விதி :-ஒரு கிரகம் சூரியனுக்கு அருகில் இருந்துகொண்டும், மற்ருெரு கிரகம் பத்தாம் பாவ இருதயத்திற்கு அருகில் இருந்தாலும் அல்லது பத்தாம் பாவ இருதயத்தைப் பார்த்தாலும் அல்லது சந்திரனைப் பார்த்தாலும் அப்போது இந்த இரண்டு கிரகங்களையும் கவனிக்க வேணும். இந்த இரண்டு கிரகங்களில் எந்தக் கிரகத்திற்கு ஜீவனுேபாவ விஷயத்தில் அதிக பலமும் அதிகாரமும் இருக்கிறதோ அந்தக் கிரகம் ஜீவனத்தை நிர்ணயிக்கும்.

(6) 4-வது விதி :-சூரியனுக்கு அருகிலும் பத்தாம் பாவ இருதயத்தின் அருகிலும் கிரகம் இல்லாமலிருந்தாலும் பத்தாம் பாவ இருதயத்தை எந்தக் கிரகமும் பார்க்காமலிருந்தாலும் அப்போது பத்தாம் பாவ இருதயம் இருக்கின்ற இராசிநாதனையே ஜீவனத்தை நிர்ணயிக்கின்ற கிரமமாக எடுத்துக் கொள்ளவும். இந்தக் கிரகமானது எப்போதாவது கொஞ்ச காலத்திற்கு இருக்கிற ஜீவனத்தையே கொடுக்கும். இந்த மாதிரி கிரக யோகம் இருக்கின்றவர்கள் பெரும்பாலும் தொழில் இல்லாமல் ஓய்வாயிருக்கின்ருர்கள்.

(7) ஒரே கிரகமானது பலவித ஜீவனுேபாயங்களுக்கு அதிகாரமுடையதாயிருக்கிறது. மேலும் ஒரு கிரகத்திற்குரிய இந்த பலவித ஜீவனுேபாயங்களில் சில மேன்மையானதாகவும் கௌரவமுள்ளதாகவும், சில தாழ்ந்ததாகவும், அகௌரவமுள்ளதாகவும், ஈனமாகவும் இருக்கின்றன. மேலே அயிட்டம் நெ. 7-ல் (3), (4), (5), (6)-ல் சொல்லிய நான்கு விதிப்படி ஏற்படுகிற ஜீவனத்தை நிர்ணயிக்கும் கிரகமானது சுவக்ஷேத்திரம், உச்சம் ஆகிய இவைகளிலிருந்தாலும், வலிவாயிருந்தாலும் சுபக் கிரகங்களினுடைய சுப பார்வை பெற்றிருந்தாலும், கேந்திரங்களிலிருந்தாலும் சூரிய

னுக்குக் கிழக்குப் பாகத்தில் இருந்தாலும் உச்சிக்கு அருகிலிருந்தாலும் ஜீவனமானது கௌரவமுள்ளது, மேன்மையானது, சாயக்கால் உடையது, அதிகாரம் உள்ளது ஆகும். இந்தக் கிரகமானது பாதாளத்திலிருந்தாலும் அல்லது சூரியனுக்கு மேற்கிலிருந்தாலும் பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் ஜீவனமானது தாழ்ந்த அந்தஸ்தையுடையதாகும். சுபக் கிரகம் ஜீவனத்தை நிர்ணயிக்கும் கிரகமாயிருந்து வலிவாய் இருந்தால் மேன்மை நல்ல அந்தஸ்துடைய ஜீவனத்தைக் கொடுக்கும், பாபக் கிரகங்கள் வலிவாய் இருந்து ஜீவனத்தை நிர்ணயிக்கும் கிரகத்தைப் பார்த்தால் ஜீவனமானது அகௌரவமானது, தாழ்ந்த அந்தஸ்தையுடையது, கஷ்டமானது, நிலையில்லாதது, ஏழ்மைத் தன்மையானது, சுகாதாரஈனமாயுள்ள இடத்தில் செய்யத் தக்கது முதலியது ஆகும்.

---

# 4-வது அத்தியாயம்.

(8) ஜீவனத்தை நிர்ணயிக்கும் (அல்லது உண்டு பண்ணுகிற) கிரகத்தைச் சனி பார்த்தால் ஜீவனம் மிகவும் கஷ்டத்துடனும், தாமதத்துடனும் கிடைக்கும்.

(9) ஜீவனத்தை நிர்ணயிக்கும் கிரகத்தைச் செவ்வாயாவது சனியாவது கெட்ட பார்வையுடன் பார்த்தால் ஜாதகனுக்கு ஜீவன விஷயத்தில் அனேக எதிரிகள் இருந்துகொண்டு இவனைக் கெடுத்துவிடவும் கவிழ்த்து விடவும் பார்ப்பார்கள். இந்த விதமாக கிரக யோகம் உள்ளபோது சந்திரனைப் புதன் சுப பார்வையுடன் பார்த்தால் ஜீவனத்தில் பல எதிரிகள் இருந்தபோதிலும் அதிக கெடுதி கிடையாது.

(10) புதனும் குருவும் வலிவாய் இருந்து சூரியனையாவது சந்திரனையாவது குரு சுப பார்வையுடன் பார்த்தாலும் அல்லது குருவானவர் சூரியனுடனாவது சந்திரனுடனாவது கூடியிருந்தால் நியாய ஸ்தலத்தில் நல்ல ஜீவனம் கிடைக்கும்.

(11) குரு அல்லது சூரியன் அல்லது சந்திரன் 9-வது அல்லது 10-வது பாவத்திலிருந்து சனியினுடைய சுபபார்வை பெற்றால் தெய்வீக சம்மந்தமான விடத்தில் நல்ல ஜீவனம் கிடைக்கும்.

(12) செவ்வாய் வலிவாக யிருந்து சூரியனாவது சந்திரனாவது அல்லது புதனாவது இந்தச் செவ்வாயைச் சுப பார்வையுடன்

பார்த்தால் வைத்திய சம்மந்தமான விடத்தில் நல்ல ஜீவனம் கிடைக்கும்.

(13) புதன் எப்போதும் சூரியனுக்கு அருகாமையில் இருப்பதால் 1-வது, 9-வது, 10-வது, 11-வது பாவத்தில் இருந்தால் வியாபாரத்தையாவது உத்தியோகத்தையாவது பெரும்பாலும் நிர்ணயிக்கிறது. (அயிட்டம் நெ. 7. (2)யைப் பார்க்கவும்.) புதனைத் தவிர மற்றொரு கிரகம் சூரியனுக்கு அருகில் இருந்து சூரியனுக்கு முந்தி உதையமாவதா யிருந்தால் அல்லது பத்தாவது பாவத்தில் மற்றொரு கிரக மிருந்தால் இந்த மற்றொரு கிரகமானது ஜீவனத்தை நிர்ணயிக்க அதிக அதிகாரமுடைய கிரகமாகிறது. சூரியனுக்கு அருகில் இருந்து சூரியனுக்கு முந்தி உதையமாகிற ஒரு கிரகம் இருக்கும்போதே மற்றொரு கிரகம் பத்தாம் பாவத்திலிருந்தால் இந்த இரண்டு கிரகங்களில் எந்த கிரகத்திற்குச் சந்திரனுடைய பார்வை யிருக்கிறதோ அந்தக் கிரகமானது ஜீவனத்தை நிர்ணயிக்கும்; இந்த இரண்டு கிரகங்களும் சந்திரனால் ஏககாலத்தில் பார்க்கப்பட்டாலும் அல்லது பார்க்கப்படாமலிருந்தாலும் இந்த இரண்டு கிரகங்களில் எந்தக் கிரகத்திற்கு அதிக சுப பார்வை யிருக்கிறதோ அந்தக் கிரகம் ஜீவனத்தை நிர்ணயிக்கும். (அயிட்டம் நெ. 7, (3)யைப் பார்க்கவும்). இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கிரகங்கள் புதனுடன் கூடி யிருந்து கேந்திரத்திலுள்ளச் சந்திரனால் பார்க்கப்பட்டால் ஜாதகர் நிலையாக ஓரிடத்திலுமில்லாமல் அடிக்கடி தன் ஜீவனத்தையும் வாச ஸ்தலத்தையும் மாற்றிக்கொண்டே இருப்பார்.

(14) பத்தாம் பாவாதிபதி 1-வது பாவத்திலிருந்தால் பொது ஜனங்களிடத்தில் அதிகாரமுண்டு.

(15) பத்தாம் பாவாதிபதி 2-வது பாவத்திருந்தால் தனம் வந்து சேரும்.

(16) பத்தாம் பாவாதிபதி 3-வது பாவத்திலிருந்தால் ஜீவன விஷயமாகப் பிரயாணமுண்டு.

(17) பத்தாம் பாவாதிபதி 4-வது பாவத்திலிருந்தால் வயதின் கடைப்பாகத்தில் சௌக்கியமும், பூமியும், சொத்தும் உண்டு.

(18) பத்தாம் பாவாதிபதி 5-வது பாவத்திலிருந்தால் சந்ததிகளாலும் சந்ததி மூலமாயும் ஜீவனமும் உதவியும் உண்டு.

(19) பத்தாம் பாவாதிபதி 6-வது பாவத்திலிருந்தால் ஜாதகருக்கு சேவகத்தன்மை உண்டு, தரித்திரம் உண்டு.

(20) பத்தாம் பாவாதிபதி 7-வது பாவத்திலிருந்தால் மனைவி மூலமாய் ஜாதகருக்குச் சகாயம் உண்டு.

(21) பத்தாம் பாவாதிபதி 8-வது பாவத்திலிருந்தால் ஒருவர் இறந்துபோவதால் ஜாதகருக்குச் சௌக்கியமுண்டு.

(22) பத்தாம் பாவாதிபதி 9-வது பாவத்திலிருந்தால் நியாயஸ்தலம், கோயில் இவைகள் சம்மந்தமான விடத்தில் நன்மையுண்டு, கப்பல் வியாபாரத்தினாலும், சமுத்திரப் பிரயாணத்தினாலும் நன்மையுண்டு.

(23) பத்தாம் பாவாதிபதி 10-வது பாவத்திலிருந்தால் சௌக்கியமும், நல்ல அந்தஸ்தும், கௌரவமும், பெரிய அதிகாரிகளுடைய தய்வும் உதவியும் உண்டு.

(24) பத்தாம் பாவாதிபதி 11-வது பாவத்திலிருந்தால் சினேகிதர்களால் நன்மையுண்டு.

(25) பத்தாம் பாவாதிபதி 12-வது பாவத்திலிருந்தால் கஷ்டம், சிறைச்சாலைவாசம், நஷ்டம் இவைகள் உண்டு.

(26) புதன் பத்தாம் பாவாதிபதியாகி அல்லது ஜீவன நிர்ணய கிரகமாகி இருக்கும்போது :—

(எ) புதனும் செவ்வாயும் கூடினால் ஜாதகர் சுரங்க வேலைக்காரர், கல்தச்ச வேலைக்காரர், சிற்பி, இடையர், மாலுமி, பால், தயிர், மோர், வெண்ணை, பாற்கட்டி வியாபாரி, தோற்பதன் சாயமிடுவோன், சவக்குழி ஞாபகார்த்தமான சாசன கல்தச்ச வேலைக்காரர், ரணவைதியர், யந்திரக்காரன், இரும்பு வேலைக்காரன், இரும்பு வியாபாரி, படகு, கப்பல் முதலியவைகளைச் செய்பவன்.

(பி) புதனைச் சனி சதுர்கோணப் பார்வையுடன் பார்த்தால் ஜாதகர் குயவன்—கடைச்சற் பிடிக்கிறவன்—சதாக்காலமும் திருடன்.

(சி) புதனைச் சனி சதுர்கோண மல்லாத மற்ற பார்வையாகப் பார்த்தால் தெய்வீகச் சம்பந்தமான விடத்தில் தொழில், பிரருடைய விவகாரங்களையும் விஷயங்களையும் பரிபாலிக்கும் தொழில்.

(டி) புதனும் குருவும் கூடினால் ஜாதகர் வாசாலப் பிரசங்கி வக்கீல்கள் என்ற லாயர்கள், பாரிஸ்டர்கள், பிலீடர்கள், வட்டி வியாபாரியின் குமஸ்தா, வர்ண வேலைக்காரர், பெரிய மனுஷாளிடத்தில் குமஸ்தா, கோயில்களில் மடங்களில் குமஸ்தா, கம்பனி வியாபாரம், பலசரக்கு வியாபாரம்.

(இ) புதனும் சுக்கிரனும் கூடினால் நாடகசாலையில் தொழில், நாடகத்தொழில், சங்கீதம் வாத்தியம் முதலியவையில் தொழில், ஜோதிடசாஸ்திரி, வானசாஸ்திரி.

(எப்) புதனைக் குருவும் சுக்கிரனும் இருவரும் சேர்ந்து ஏக காலத்தில் பார்த்தாலும், அல்லது புதனுடன் குருவும் சுக்கிரனும் இருவரும் ஏககாலத்தில் கூடினாலும் (-பார்த்தாலும் என்பதில் எப்போது சமாகமப் பார்வையும் அடங்கி இருக்கிறது என்று எப்போதும் பாவிக்கவும்-) நகை வியாபாரி, இரத்தின வியாபாரி, சங்கீத பாடகன், சிற்பி, வர்ண வேலைக்காரன்.

(ஜி) புதனுடன் சுக்கிரனும் சனியும் ஏககாலத்தில் கூடினால் பெண்களுக்குத் தேவையான ஆடை, ஆபரணம் செய்தல் விற்றல்.

(எச்) புதனுடன் ஏககாலத்தில் சுக்கிரனும் குருவும் கூடினால் உபாத்தியாயர்—ஜட்ஜி என்ற நியாயாதிபதி—மாஜிஸ்ரேட்டு என்ற குற்றவாளி நியாயவிசாரணாதிபதி.

(ஐ) புதனுடன் ஏககாலத்தில் செவ்வாயும் குருவும் கூடினால் வெளிதேசத்து அல்லது வெளிநாட்டு வியாபாரம்—சேனையில் கௌரவமான உத்தியோகம் அல்லது தொழில், கௌரவமான வியாபாரம்.

(27) சுக்கிரன் பத்தாம் பாவாதிபதி அல்லது ஜீவன நிர்ணய கிரகமாகி இருக்கும்போது

(எ) சுக்கிரனைக் குரு பார்த்தாலும் கூடினாலும் நானாவஸ்துப் பிரதரிசன கண்காட்சி சாலையில் தொழில், கோயில் குருக்கள், மடாதிபதிகள், மதசம்மந்தமான, தெய்வீகச் சம்மந்தமானவைகளைப் பரிபாலித்தல், நடத்தல், அடக்கி ஆளுதல், ஜவுளி வியாபாரம், நானா வியாபாரம், இராஜாங்கத்தில் பெண்கள் முகாந்தரமாய் நம்பிக்கை தேவையானவிடத்தில் பொறுப்பாளியாகக் கௌரவம் அடைதல்.

(பி) சுக்கிரனைச் சனி பார்த்தாலும் கூடினாலும் தையல் வேலை, மருந்து வியாபாரி, மருந்து கடைக்காரன், இரஸவாதி, வைத்தியன், வரி தண்டுவோன், வரி வசூல்செய்பவன், மந்திரவாதி, மூடவைதியன், மாரீசன், வீம்புக்காரன், அதிகமாகப் படித்துவிட்டு வர்த்தகஞ் செய்யும் வியாபாரி, ஆடை ஆபரண, அலங்கிருத சாமான்கள் விஷயங்களில் தொழில், கேளிக்கை, வேடிக்கை முதலியவைகள் சம்மந்தமான விடத்திலும் வஸ்துவிலும் தொழில், இந்த சுக்கிரனையும் சனியையும் ஏககாலத்தில் பாபக் கிரகங்கள்

பார்த்தால் ஜாதகி வியபிசாரியாகி விலைமகள் என்ற விலைமாது என்ற தேவ அடியாள் என்ற தெவடியாளாக ஆகிருள்.

(28) செவ்வாய் பத்தாம் பாவாதிபதி அல்லது ஜீவன நிர்ணய கிரகமாகி இருக்கும்போது :—

(எ) செவ்வாயைச் சூரியன் பார்த்தால் நெருப்பு சம்மந்த மான விடத்தில் தொழில், இரவில் ஜெனனம் நேரிட்டிருந்தால் போர் வீரன், இவைகள் சூரியன் பத்தாம்பாவ இருதயத்தைப் பார்த்தாலும் அல்லது பத்தாம்பாவ இருதயத்திற்கு அருகில் இருந்தாலும் பெரும்பாலும் நேரிடும், வேடுவன், செம்பு, பித்தளை முதலிய உலோகங்களில் வேலை செய்யும் தொழில், வார்படவேலை, யந்திரங்கள் செய்யும் தொழில் சமையல் வேலை.

(பி) செவ்வாயுடன் சூரியன் கூடியிருந்தால் தச்ச வேலையில் உயர்ந்த வேலை.

(சி) செவ்வாயுடன் சந்திரன் கூடினுல் சாராயங் காய்ச்சு பவன், சாயவேலை செய்பவன், கசாப்புகாரன், செம்படவன், மீன் வியாபாரி.

(டி) செவ்வாயுடன் குரு கூடினுலும் செவ்வாயைக் குரு பார்த்தாலும் யந்திரவித்தைத் தொழில், உண்டிக்கடை, சாராயம், மது முதலிய லாகிரிவஸ்துகடை வியாபாரி, புகையிலை வியாபாரி, வரிகளை வசூல் செய்பவன்.

(இ) செவ்வாயுடன் குரு கூடி இருந்து இவ்விருவர்களில் செவ்வாய் அதிக வலிவாயிருந்தால் ஜாதகர் மதாச்சாரி, மத சம்மந்தமானவிடத்தில் குமஸ்தா லாயர் என்ற வக்கீல் ஆவார்.

(எப்) செவ்வாயுடன் சனி கூடினுலும் பார்த்தாலும் சுரங்கம், கிணர் முதலியவைகளில் வேலை, வர்ணவேலை, மாலுமி, சுண்ணும்பு முதலிய வெள்ளையடித்தல், சமையல்வேலை, ஆடுமாடு களையும் மிருகங்களையும் வைத்துக் காப்பாற்றுதல், கசாப்புவேலை, தோற்பதன்செய்யும் வேலை, கண்காட்சி வேடிக்கை சாலை, நாஞ வஸ்துப் பிரதரிசனசாலை இவைகளில் வேலைக்காரன், நீராட்டு சாலையில் அல்லது குளிநீர்சாலையில் வேலைக்காரன்.

(ஜி) செவ்வாயும் சனியும் ஒருவரை ஒருவர் கெட்ட பார்வை யுடன் பார்த்துக்கொண்டால் தினந்தோறும் கஷ்டப்பட்டு வேலை செய்யும் கூலி வேலைக்காரன், பெயிலிப், பெருக்குகிறவன், தோட்டி, மரக்கரி அடுப்புக்கரி எரிக்கிறவன், நெல்லு குத்துகிற, மாவு அறைக்கிற, மிளகாய் அறைக்கிர முதலிய மில்லுகளில் ஜீவனம்.

(29) செவ்வாயும் புதனும் ஆகிய இவர்கள் இருவரும் ஏக காலத்தில் ஜீவன நிர்ணயக் கிரகமாக இருக்கும்போது:—

(எ) ஜாதகன் பீரங்கி துப்பாக்கி, குண்டு, படைக்கலம் முதலிய சண்டை ஆயுதங்களைச் செய்பவன், சிற்பி, செதுக்கு வேலைக்காரன், களிமண், மெழுக்கு முதலியவைகளால் பதுமைகளைச் செய்பவன், பொன்முலாம் பூசுதல், குஸ்தி பிடித்தல், குத்து சண்டை செய்தல் முதலிய தொழில், விபசாரத் தொழில், செவ்வாயைவிட புதன் வலிவாயிருக்கும்போது அச்சுவேலைக்காரன், சர்வேயர் தொழில்.

(பி) இவ்விதச் செவ்வாயையும் புதனையும் குரு கூடினுல் சேனையில் கௌரவமான உத்தியோகம், கைத்தொழில்சாலை ஜீவனம்.

(சி) இவ்விதச் செவ்வாயையும் புதனையும் சனி கூடி இருக்கும்போது சந்திரனைப் புதன் கெட்ட பார்வையுடன் பார்த்தால் ஜாதகன் திருடன், மோசக்காரன்.

(டி) இவ்வித செவ்வாயையும் புதனையும் சனி கூடியிருக்கும் போது சந்திரனைச் செவ்வாய் கெட்ட பார்வையுடன் பார்த்தால் ஜாதகன் கொள்ளைக்காரன், கொலையாளி.

(இ) இந்தச் செவ்வாயும் புதனும் குருவை ஏககாலத்தில் கெட்ட பார்வையுடன் பார்த்தால் ஜாதகன் அதிகமாகவும் நன்றாகவும் வாதாடி வழக்குரைக்கும் வக்கீலாவான்.

(30) புதனும் சுக்கிரனும் ஆகிய இவர்கள் இருவரும் ஏககாலத்தில் ஜீவன நிர்ணய கிரகமாக இருக்கும்போது:—

(எ) ஜாதகர் கவிவானர், புலவர், சங்கீதம் பாடுபவன், வீணை, பிட்டீல், நாகசரம், சுருதி, ராகம் முதலியவை வாசிப்பவன், கூத்தாடி, நடனஞ் செய்பவன், ரெசவுக்காரன், வாச்சாலகப் பிரசங்கி, நாடகன், பள்ளிக்கூட உபாத்தியாயர், வர்ணவேலைக்காரன், சிற்பி, பப்பூன், விகடகவி, அகசியம் செய்பவன், வீணை, பிட்டீல் நாகசரம் முதலிய சங்கீதங்களை உண்டுபண்ணும் சாமான்களைச் செய்பவன், இன்பியல் நாடகம் செய்வோன் (Comedian).

(பி) இந்தப் புதனையும் சுக்கிரனையும் குரு பார்த்தாலும் கூடினுலும் ஜாதகர் போதகுசிரியர், மாஜிஸ்ரேட்டு, ஜட்ஜி, சட்ட நிரூபண சபை மந்திராலோசனை சபை, பிரதிநிதிச்சபை ஆகிய இவைகளில் ஒரு அங்கத்தினர், பத்தாம்பாவத்தின் இருதயம் ரிஷப துலா ராசிகளிலிருந்தாலும் புதன் சூரியனுக்கு வெகு

அருகாமையில் இருந்து சூரியனுக்கு முன்னே உதையமானல் இவ் விதமான பலன்கள் விசேஷமாக நடக்கும்.

(சி) இந்தப் புதன் சுக்கிரன் இருவர்களில் புதன் வக்கிர மாய் இருந்தால் ஜாதகன் கெட்டிக்கார பாடகன், திறமைவாய்ந்த கீர்த்திபெற்ற சங்கீத வித்வான்.

(31) செவ்வாயும் சுக்கிரனும் ஆகிய இவர்கள் இருவரும் ஏககாலத்தில் ஜீவன நிர்ணய கிரகமாய் இருக்கும்போது:—

(எ) வாசனைத் திரவியம், மருந்து, சாயவகையராக்கள் ஆகிய இவைகளில் வியாபாரம், நாடகசாலைகளில் தொழில், பொன், வெள்ளி, தகரம், ஈயம் இவைகள் விஷயமாய்த் தொழில், தோட்டக்கார வேலை, நாவிதவேலை, மருந்து வியாபாரம், விவசாயம், வைத்தியம், வாசனைத் தைலாதி வியாபாரம்.

(பி) இந்தச் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் இருவருடனுவது ஒருவருடனுவது சனி கூடியிருந்தால் மதசம்மந்தமானக் கிரிகை களில் வேலையாள், சபக்குழி வெட்டுபவன், சபம் சுமப்பவன், மரணச் சடங்குகளைச் செய்பவன், மதசம்மந்தமாய் அதாவது கோயில், மடாலயம் முதலியவைகளில் இருக்கும் யானை, குதிரை, ஒட்டை, ரிஷபம் முதலியவைகளுக்கு வேலையாள்.

(சி) இந்தச் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் இருவருடனும் குரு கூடினுல் தெய்வீக சம்மந்தமான அல்லது மத சம்மந்தமான உத்தியோகம், புரோகித வேலை, மொழிபெயர்க்கிறவன், ஜெயில் அதிகாரி, பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்ட உபாத்தியாயர் அல்லது அதிபதி.

(டி) இந்தச் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் இருவரையும் சூரியன் பார்த்தாலும் கூடினுலும் இராஜாங்கத்தில் அதிகார உத்தியோகங்கள்.

(இ) இந்தச் செவ்வாய் சுக்கிரன் இவர்களுடன் யூரேனெஸ் சம்மந்தப்பட்டால் போலீஸ் உத்தியோகஸ்தர், போலீஸ் கான்ஸ் டேபில், மருந்து வியாபாரி, தத்துவ விசாரகன், வேதாந்தி, ஞானி, யுக்தாயுக்த விசாரகன்.

(32) சந்திரன் ஜீவன நிர்ணயக் கிரகமாய் இருந்து சூரிய னுடைய பார்வை அல்லது சம்மந்தத்தைவிட்டுப் பிரிந்து புதனு டைய பார்வையை அடைந்தால் ஜாதகர் உபாத்தியாயர், ஜோதி டன், வான சாஸ்திரி, பிரயாண உத்தியோகஸ்தன், டாக்டர்,

கபால சாமுத்திரிக சாஸ்திரி. இப்படி யிருந்து யூரேனெஸ்ஸை புதனுவது சந்திரனுவது பார்த்தால் இப் பலன்கள் விசேஷமாய் நடைபெறும்.

(33) ஜீவனேபாய கிரகங்கள் வலிவுடனும் நல்லி பார்வை யுடனும் லக்கினத்திலிருந்தால் இளம்பிராயத்தில் அதாவது 21-வயதிலும், பத்தாம்பாவத்திலிருந்தால் மத்திம வயதிலும் அதாவது 30 முதல் 45 வயது வரையிலும், ஏழாம்பாவத்திலிருந்தால் வயது சென்றபிறகு அதாவது 40 முதல் 55-வது வயது வரையிலும் ஜீவனத்தில் யோகமுண்டு.

---

# 5-வது அத்தியாயம்.

---

## அதிருஷ்டமும் திரவிய ஆதாரமும்.

(மேல்நாட்டு சாயன ரீதியாய்ப் பார்க்கவும்.)

அயிட்டம் நெ. 8:

கிரகங்களில் பாபக் கிரகங்கள் சுபக் கிரகங்களைவிட அதிக மாக இருப்பதால் உலகத்தில் தனவந்தர்களைவிட ஏழைகள் அதிக மாக விருக்கின்றார்கள். அதாவது அதிருஷ்டமான ஜாதகங்களை விட தரித்திரமான ஜாதகங்கள் விசேஷமாகக் காணப்படுகின்றன. அதிருஷ்டம், தரித்திரம், சுபயோகம், அவயோகம், லாபம், நஷ்டம் ஆகிய இவைகளைக் கவனிக்கவேண்டுமானல் (1) இரண்டாம் பாவம், பதினேராம்பாவம், ஐந்தாம்பாவம், எட்டாம்பாவம் ஆகிய இவைகளையும் (2) இந்த நான்கு பாவாதிபதிகளையும் (3) இந்த நான்கு பாவங்களில் இருக்கிற கிரகங்களையும் (4) இந்த நான்கு பாவங்களைப் பார்க்கின்ற கிரகங்களையும் முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். திரவியத்தையும் சொத்தை (ஆஸ்தி)யும் இரண்டாம் பாவத்தைக்கொண்டும், தொழிலாலும் வியாபாரத்தினுலும் வருகின்ற லாபத்தைப் பதினேராம் பாவத்தைக் கொண்டும், சாகச வியாபாரம் (என்ற துணிபு வியாபாரம் அதாவது துணிகரமாய், அல்லது தைரியமாய்ச் செய்யும் வியாபாரம்- Speculative Business) என்பதை ஐந்தாம்பாவத்தைக் கொண்டும், மரண சாசன பொருள் கொடையால் ஆஸ்தியை அடைதல் (Legacy), பிதுரார்ஜிதம் முதலிய உரிமை வார்சு சொத்து அடைதல் (Inheritance), பொது

சொத்து, கூட்டாளி சொத்து, மனைவி சொத்து இவைகளை அடைதல், நஷ்டம் ஆகிய இவைகளை எட்டாம் பாவத்தைக்கொண்டும் அறியவேணும். ஒரு கிரகத்தினுடைய (அதாவது சுப, அசுப கிரகத்தினுடைய) நல்ல பார்வையானது அந்தக் கிரகத்திற்குரிய ஜனங்கள், வஸ்துக்கள், தொழில் ஜீவனம், அந்தக் கிரகம் இருக்கும்படியான ராசிக்குரிய பாவத்திற்குரிய வஸ்துக்களாலும் ஜனங்களாலும் நன்மையை விளைவிக்கும். இவ்விதமாகவே ஒரு கிரகத்தினுடைய (அதாவது சுப அசுப கிரகத்தினுடைய) கெட்ட பார்வையானது அந்தக் கிரகத்திற்குரிய ஜனங்கள் வஸ்துக்கள், தொழில், ஜீவனம், அந்தக் கிரகம் இருக்கும்படியான ராசிக்குரிய பாவத்திற்குரிய வஸ்துக்களாலும் ஜனங்களாலும் கெடுதியை விளைவிக்கும். மேலும் பெரும்பாலும் பொதுவாக உலகத்தில் எல்லோருக்கும் யோக காரகர்களாக (அதாவது யோக காரக கிரகங்களாக) இருக்கின்ற கிரகங்கள் சந்திரன், சூரியன், குரு, சுக்கிரன் ஆகிய இந்நான்கு கிரகங்களானபடியால் இந்நான்கு யோக காரக கிரகங்களை முக்கியமாய்க் கவனிக்க வேணும். ஆண் ஜாதகத்தில் சூரியனைவிடச் சந்திரனை முக்கியமாகக் கவனிக்கவும். பெண் ஜாதகத்தில் சந்திரனைவிடச் சூரியனை முக்கியமாய்க் கவனிக்கவும்.

அயிட்டம் நெ. **9:** அதிருஷ்ட இருதயம் :—

அதிருஷ்ட இருதயம் (Part of Fortune) என்பது லக்கினத்தைப் போன்ற ஒரு அரூபமான அம்சம். அதனுடைய ஸ்தானம் அல்லது ஸ்புடத்தை அடியிற்கண்டபடி அறியவும். ஜெனன காலத்திலுள்ள லக்கின ஸ்புடத்தையும் சந்திர ஸ்புடத்தையும் கூட்டி வருகின்ற மொத்த ஸ்புடத்திலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற நிகர ஸ்புடமே அதிருஷ்ட இருதய ஸ்புடம் ஆகும். இந்த அதிருஷ்ட இருதய ஸ்புடமே அதிருஷ்ட இருதயத்தின் ஸ்தானத்தைக் குறிக்கும் ஸ்புடம் ஆகும்.

அயிட்டம் நெ. **9:** கிரகங்கள் கொடுக்கும் திரவியத்தின் மூலாதாரங்கள் முதலியன :—

*(1)* சூரியன் :—தகப்பன் மூலமாயும் பெரிய உத்தியோகஸ்தர்கள் மூலமாயும், வியாபாரம் மூலமாயும் பண வரவு (திரவிய வரவு, திரவிய வருத்து) உண்டு. வரவுக்குத் தகுந்த செலவும் உண்டு.

*(2)* சந்திரன் :—பொதுஜனங்கள் மூலமாயும், தாய், தாய் வழி மூலமாயும், பெண்கள் மூலமாயும், திரவிய வரவு உண்டு.

(3) சேவ்வாய்:—விவாகம் மரண சாசன நன்கொடை, இவைகள் மூலமாய்த் திரவிய வரவு உண்டு. வருவாய்க்குத் தகுந்த செலவும் உண்டு.

(4) புதன் :—எழுத்து மூலமாகவும், கிரந்த கர்த்தாவாகவும் ஆசிரியராகவும் இருத்தல் மூலமாகவும், வியாபார மூலமாகவும் ஏஜென்டுகளாய் இருத்தல் மூலமாகவும், பிரயாணத் தொழில் மூலமாகவும், கைத்தொழில் வேலை மூலமாகவும் திரவிய வருத்து உண்டு. திருடராலும் திரவிய நாசம் உண்டு.

(5) குரு :—மரண சாசன பொருள் கொடையால் ஆஸ்தி அடைதலாலும், பிதுரார்ஜிதம் முதலிய உரிமை வார்சு சொத்து அடைதலாலும் தெய்வீக சம்மந்தமான மத சம்மந்தமான வழிகளாலும், கப்பல் ஏற்றுமதி இறக்குமதி சம்மந்தமானவைகளாலும், திரவிய வருத்து உண்டு.

(6) சுக்கிரன் :—பெண்களாலும், சினேகிதர்களாலும், திரவிய வருத்து உண்டு, செலவும் உண்டு.

(7) சனி :—முதலிடு (கைமுதல்) பொருள் வந்து சேருதல், சேர்த்து வைத்த பொருள் வந்து சேருதல், கஷ்டாத்திய சொத்து வந்து சேருதல் ஆகிய இவைகள் மூலமாய்த் திரவிய வருத்து உண்டு.

(8) யூரேனேஸ் :—திடீரென்று எதிர்பாராத விதத்தினால் திரவிய வருத்து உண்டு, திடீரென்று எதிர்பாராத விதத்தினால் நஷ்டமும் உண்டு.

(9) நேப்த்யூன் :—ஆஸ்பத்திரிகள் மூலமாயும், காரியாலயங்கள், ஸ்தாபனங்கள் சங்கங்கள் ஆகிய இவை போன்றவைகளாலும் ஏமாற்றுதலாலும், திருட்டு வழியாலும் திரவிய வருத்து உண்டு.

அயிட்டம். நெ. **10:** கிரகங்கள் இருக்கும் ராசிகளையும் பார்க்கும் கிரகங்களையும் அனுசரித்து பலன் :—

கிரகங்கள் ராசிகளில் இருத்தலால் உண்டாகும் பலாபலன்களை இனி கீழே சொல்லும்போது திரவிய லாபம் உண்டு, நஷ்டம் உண்டு என்றும், உண்டு இல்லை என்றும் ஏககாலத்தில் சொல்லப்படும். இப்படிச் சொல்லியவிடங்களில் கிரகம் நல்ல பார்வையைப் பெற்றாலும், நல்ல பாவத்தில் இருந்தாலும் நல்ல பலனையும், கிரகம் கொடுக்கும் என்று எப்போதும் யூகிக்கவும். இந்த சாயன

ரீதியாய்ச் சொல்லும் மதத்தில் சொல்லிய ராசிகள் எல்லாம் சாயன ராசிகளாகும்.

(1) சூரியன் :—சிம்மத்திலுள்ள சூரியனால் பெரும்பாலும் ஜாதகருக்குத் திரவிய சங்கட்டம் கிடையாது. கன்னியிலுள்ள சூரியனால் மத்திம வயதில் திரவிய லாபமுண்டு.

(2) சந்திரன் :—சந்திரன் லக்கின பாவத்திலிருந்தாலும், இரண்டாம் பாவத்திலிருந்தாலும், இரண்டாம் பாவாதிபதியின் வீட்டிலிருந்தாலும், நல்ல பார்வையைப் பெற்றாலும் திரவியத்தைக் கொடுப்பார். சந்திரன் குருவினுடைய கெட்ட பார்வையை அடைந்தால் தயாள குணத்தாலும் அஜாக்கிரதையாலும் திரவிய நாசம் உண்டு. சந்திரன் சனியுடன் கூடி கேந்திரத்திலிருந்தால் அவயோகமுண்டு, தரித்திரமுண்டு. சந்திரன் சனியினுடைய கெட்ட பார்வையை அடைந்தால் திரவிய நாசமுண்டு. ரிஷபத்திலுள்ள சந்திரனால் மொத்த வியாபாரியாயிருத்தலாலும், பிதுரார்ஜிதத்தாலும் தன வருத்து உண்டு, நஷ்டம் உண்டு. கடகத்திலுள்ள சந்திரனால் கப்பல் ஏற்றுமதி இறக்குமதியாலும் சொத்துக்களிலிருந்தும் தன வருத்து உண்டு, நஷ்டம் உண்டு. தனுசிலுள்ள சந்திரனால் தன்னுடைய வேலையாட்கள் மூலமாய்த் திரவிய லாபமுண்டு, நஷ்டம் உண்டு.

(3) செவ்வாய் :—செவ்வாய் இரண்டாம் பாவத்திலிருந்து சந்திரனைக் கெட்ட பார்வையுடன் பார்த்தால் யுத்தம் சேரிடுவதாலும், திருட்டாலும், அக்கினியாலும் திரவிய நாசமுண்டு. செவ்வாய் குருவினுடைய கெட்ட பார்வையைப் பெற்றால் ஜாதகர் செலவாளியாயிருத்தலால் திரவிய நாசமுண்டு. செவ்வாய் சனியினுடைய கெட்ட பார்வையை அடைந்தால், தரித்திரமுண்டு. மேஷத்திலுள்ள செவ்வாயால் விவாகத்தினால் தனச் செலவு தனச்சேதம் உண்டு, இல்லை. கடகத்திலுள்ள செவ்வாயால் பொதுஜன விஷயத்தாலும் ஏஜென்டாயிருத்தலாலும், வேலையாட்களாலும், பிரயான விஷயமான காரியங்களாலும் தன வருத்து உண்டு, நஷ்டம் உண்டு. சிம்மத்திலுள்ள செவ்வாயால் சங்கீத விஷயத்தாலும் கவர்ன்மெண்டு வேலைகளாலும் பொதுஜன வேலைகளாலும் திரவிய லாபமுண்டு, நஷ்டமுண்டு. கன்னியிலுள்ள செவ்வாயால் சாகச வியாபாரத்தாலும் ரொக்க லாவாதேவியாலும் பண வரத்துண்டு நஷ்டமுண்டு. துலாத்திலுள்ள செவ்வாயால் தன் வேலையாட்கள் மூலமாய் திரவிய நஷ்டமுண்டு இல்லை. விருச்சிகத்திலுள்ள செவ்வாயால் கலியாண மூலமாய்த் தன வரவுண்டு

நஷ்டமுண்டு. தனுசிலுள்ள செவ்வாயால் சாகச வியாபாரத்தாலும் விவாகத்தாலும் திரவிய வருத்துண்டு நஷ்டமுண்டு. மகரத்திலுள்ள செவ்வாயால் பிரயாண விஷயமானவைகளால் தன வருத்துண்டு நஷ்டமுண்டு. கும்பத்திலுள்ள செவ்வாயால் தாய், தகப்பன், பந்துக்கள் இவர்கள் மூல்யமாய்த் தனவரவுண்டு நஷ்டமுண்டு.

(4) புதன் :—புதன் செவ்வாயினுடைய பார்வையைப் பெற்ருல் கைத்தொழிலாலும், கைதொழில்சாலைகளாலும் தன வரவுண்டு. புதன் குருவினுடைய பார்வையை அடைந்தால் நியாயாதிபதியாய் இருத்தலாலும் நல்ல நியாயத்துடன் காரியங்களைச் செய்வதாலும் திரவிய லாபமுண்டு. புதன் சுக்கிரனுடைய பார்வையைப் பெற்ருல் உயர்ந்த நாஜிக்கான தொழில்களாலும் கைத்தொழிலாலும் பண வருத்து உண்டு. புதன் யூரேனெஸ்ஸின் பார்வையைப் பெற்ருல் சாகச வியாபாரத்திஞல் திரவிய லாபமுண்டு.

(5) குரு :—குரு இரண்டாம் பாவத்திலிருந்தால் தனலாபமுண்டு. கேந்திரத்திலுள்ள லக்கிஞதிபதியையாவது சந்திரனையாவது குரு நல்ல பார்வையுடன் பார்த்தால் குரு அதிக செல்வத்தைக் கொடுப்பார். நான்காவது, அல்லது எட்டாவது பாவத்திலுள்ள சனியினுடைய அல்லது யூரேனெஸ்ஸினுடைய நல்ல பார்வையைக் குரு பெற்ருல் பிதுரார்ஜித சொத்தும், மரண சாசன பொருள் கொடை சொத்தும் வந்து சேரும். குரு, சனியினுடைய கெட்ட பார்வையைப் பெற்ருல் வியாஜ்ஜியத்தாலும், பொறுப்பாளியாலும் திரவிய நாசமுண்டு, தரித்திரமுண்டு. மேஷத்திலுள்ள குருவால் கப்பல் வியாபாரத்தாலும் வெளிதேச வியாபாரத்தாலும் தனவருத்துண்டு நஷ்டம் உண்டு. ரிஷபத்திலுள்ள குருவால் சாகச வியாபாரத்தாலும், பெண்கள் மூலமாகவும் தனவரத்துண்டு நஷ்டம் உண்டு. கடகத்திலுள்ள குருவால் ஞானத்தாலும் சொத்தாலும் திரவிய வருத்துண்டு நஷ்டமுண்டு. சிம்மத்திலுள்ள குருவால் விவாகம், சுரங்கம் இவைகள் மூலமாய்த் தனவருத்துண்டு நஷ்டம் உண்டு. கன்னியிலுள்ள குருவால் கல்வியாலும் முதல் வைத்து வியாபாரஞ் செய்வதாலும் தன வருத்துண்டு நஷ்டமுண்டு; துலாத்திலுள்ள குருவால் மனைவி, வியாபாரம், ஏஜெண்டுகள், சாஸ்திரங்கள், கல்வி, காரியாலயங்கள், கூட்டாளி இவைகள் மூலமாய்த் தனலாபமுண்டு நஷ்டமுண்டு. விருச்சிகத்திலுள்ள குருவால் சுரங்கங்கள், மத்தியஸ்தர்களாய் இருத்தல் ஆகிய

இவைகள் மூலம் தனமுண்டு நஷ்டமுண்டு. தனுசிலுள்ள குருவால் சாகச வியாபாரத்தாலும் விவாகத்தாலும் பந்துக்களாலும் தன வருத்துண்டு நஷ்டமுண்டு. மகரத்திலுள்ள குருவால் பந்துக் களின் மரணத்தினுலும் வியாபாரத்தாலும் தனவருத்துண்டு, நஷ்டமுண்டு. கும்பத்திலுள்ள குருவால் பிதுரார்ஜிதம் உண்டு, இல்லை. மீனத்திலுள்ள குருவால் சுரங்கங்கள் மூலமாயும் கம் பெனிகள் மூலமாயும் திரவிய லாபமுண்டு நஷ்டமுண்டு.

(6) சுக்கிரன் :—சுக்கிரன் இரண்டாம் பாவத்திலிருந்து கெட்ட பார்வையைப் பெற்ருல் மனைவி பெண்கள் இவர்கள் மூல மாய் நஷ்டம் உண்டு, சுக்கிரன் சந்திரனுடைய பார்வையைப் பெற்ருல் பொதுஜனங்கள் மூலமாய்ச் சுகம் உண்டு. சுக்கிரன் செவ்வாயினுடைய கெட்ட பார்வையைப் பெற்ருல் வீண் செல வுண்டு. சுக்கிரன் குருவினுடைய பார்வையைப் பெற்ருல் சினேகி தர்களாலும் வெளிதேச விவகாரங்களாலும் நன்மையுண்டு. சுக்கி ரன் சனியினுடைய கெட்ட பார்வையைப் பெற்ருல் கஷ்டமும் தரித்திரமும் வந்து சேரும். சுக்கிரன் யூரேனெஸ்ஸின் கெட்ட பார்வையைப் பெற்ருல் எதிர்பாராத திடீரென்ற நஷ்டம் வந்து சேரும். மேஷத்திலுள்ள சுக்கிரனுல் தாய் வழி பந்துக்களாலும், வேலையாட்கள் இறந்து போவதாலும் திரவிய வருத்து உண்டு. கஷ்டமுண்டு. ரிஷபத்திலுள்ள சுக்கிரனுல் ஜீவனத் தொழில் ஏற் படும், ஏற்படாது. மிதுனத்திலுள்ள சுக்கிரன் சினேகிதருடைய போதனை, பந்துக்கள், சாகச வியாபாம் இவைகளால் தன வருத் துண்டு, நஷ்டம் உண்டு. சிம்மத்திலுள்ள சுக்கிரனுல் பிதுரார்ஜித சொத்து விஷயத்தால் லாபமுண்டு, நஷ்டமுண்டு. கன்னியிலுள்ள சுக்கிரனுல் கூட்டாளி, சாகச வியாபாரம் இவைகளால் லாப முண்டு, நஷ்டமுண்டு. துலாத்திலுள்ள சுக்கிரனுல் விவாக விஷ யத்தினுல் நஷ்டமுண்டு, இல்லை. தனுசிலுள்ள சுக்கிரனுல் சாகச வியாபாரம், விவாகம் இவைகளால் லாபமுண்டு, நஷ்டமுண்டு. மகரத்திலுள்ள சுக்கிரனுல் இராஜதந்திரத்திற்குரிய, தூதர்க் குரிய விஷயங்களில் லாபமுண்டு நஷ்டமுண்டு. கும்பத்திலுள்ள சுக்கிரனுல் பொதுஜன விஷயத்தினுலும், பிதுரார்ஜித சொத்து விஷயத்தினுலும் லாபமுண்டு நஷ்டமுண்டு.

(7) சனி :—சனிக்குக் குரு அல்லது சுக்கிரனுடைய நல்ல பார்வை உண்டானுல் கூட்டாளிசாலை (என்ற கம்பெனி)யாலும் பணம் முதல் வைத்து வேலை செய்வதாலும் லாபமுண்டு, நஷ்ட முண்டு. சனி ஏழாம் பாவத்திலிருந்தால் வியாபாரம் பலிக்காது. மேஷத்திலுள்ள சனியால் சிற்றப்பன் மாமன், மாமி, சிறிய

தாயார் இவர்கள் இறப்பதால் லாபமுண்டு, நஷ்டமுண்டு. மேஷத்திலுள்ள சனி குருவினுடைய நல்ல பார்வையை அடைந்தால் வயதின் கடைசி பாகத்தில் சௌக்கியமுண்டு, ரிஷபத்திலுள்ள சனியால் கைத்தொழிலாலும் முதல் வைத்து வியாபாரஞ் செய்வதாலும் லாபமுண்டு, நஷ்டமுண்டு. மிதுனத்திலுள்ள சனியால் கெட்ட வழிகளால் லாபமுண்டு நஷ்டமுண்டு. கன்னியிலுள்ள சனியால் மத சம்மந்தமான கோயில் சம்மந்தமான விஷயத்தில் லாபமுண்டு, நஷ்டமுண்டு. துலாத்திலுள்ள சனியால் உத்தி யோகத்தாலும், கஷ்டமானத் தொழிலாலும் லாபமுண்டு, நஷ்டமுண்டு. விருச்சிகத்திலுள்ள சனியால் கூட்டாளிசாலைகளாலும், அபாய ஒப்பந்த பத்திரத்தாலும் (Life Policy) பொதுஜன முயற்சிகளாலும் லாபமுண்டு நஷ்டமுண்டு. தனுசிலுள்ள சனியால் முதல் வைத்து வியாபாரஞ் செய்வதால் லாபமுண்டு, நஷ்டமுண்டு. மகரத்திலுள்ள சனியால் முதல் வைத்து வியாபாரஞ் செய்வதாலும், சாகச வியாபாரத்தாலும் லாபமுண்டு நஷ்டமுண்டு.

(8) யூரேனேஸ் :—யூரேனெஸ் ஏழாம் பாவத்திலிருந்தால் விவாகமான பிறகு அதிக கஷ்டமுண்டு, கடன்காரர்களால் அதிக உபத்திரவமுண்டு. ரிஷபத்திலுள்ள யூரேனெஸ்ஸால் கூட்டாளி வியாபாரத்தால் லாபமுண்டு, நஷ்டமுண்டு. கன்னியிலுள்ள யூரேனெஸ்ஸால் கவர்ன்மெண்டு வேலை, டிஸ்ரிகட்டு போர்ட்டு, தாலுக்கா போர்ட்டு, பஞ்சாயத்து போர்ட்டு வேலை முனிசிபாலிட்டி வேலை இவைகளால் லாபமுண்டு, நஷ்டமுண்டு. மகரத்திலுள்ள யூரேனெஸ்ஸால் போஜன சாமாக்கிரி அமைக்குந் தொழிலால் லாபமுண்டு, நஷ்டமுண்டு. மீனத்திலுள்ள யூரேனெஸ்ஸால் தர்ம சம்மந்தமான விஷயங்களால் லாபமுண்டு, நஷ்டமுண்டு.

குறிப்பு :—கேந்திர ஸ்தானங்கள் மிகவும் வலிவானவைகள். இதற்கு அடுத்தபடி ஆபோக்லீப ஸ்தானங்கள் வலிவாகும். ஸ்திர ராசிகளால் திரவியம் சேர்தலுக்கு முகாந்திரம் உண்டு, சரராசிகளால் திரவியம் செலவாவதற்கு முகாந்தரம் உண்டு. உபய ராசிகளால் இருவித முகாந்திரங்களுமுண்டு.

(9) நெப்த்யூன் :—ஆஸ்பத்திரி சம்மந்தமான வேலையில் லாபமுண்டு, நஷ்டமுண்டு.

---

# 6-வது அத்தியாயம்.

## சுபயோகங்கள்

அயிட்டம் நெ. 11:

(1) யோக காரக கிரகங்களாகிய சந்திரன், சூரியன், குரு, சுக்கிரன் இவர்கள் 10, 11, 12-வது பாவங்களில் இருந்தால் ஜாதகருக்கு வாலிபத்தில் சுபயோக முண்டாகும். இவர்கள் 7, 8, 9-வது பாவங்களிலிருந்தால் ஜாதகருக்கு 25 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் சுபயோக முண்டாகும். இவர்கள் 4, 5, 6-வது பாவங்களில் இருந்தால் ஜாதகருக்கு 40 வயதிற்குமேல் 50 வயதிற்குள் சுபயோகமுண்டாகும். இவர்கள் 1, 2, 3-வது பாவங்களில் இருந்தால் ஜாதகருக்கு 50 வயதிற்கு மேல்பட்டு சுபயோகமுண்டாகும். இந்தப் பலன்களைச் சுபயோகத்தை உடைய ஜாதகங்களுக்கு மாத்திரம் சொல்ல வேண்டும், சுபயோகம் இல்லாமல் இருக்கிற அவயோக ஜாதகங்களுக்குச் சொல்லக் கூடாது.

சந்திரன், குரு, சுக்கிரன் இவர்களுடைய ஸ்புடமானது சூரியனுடைய ஸ்புடத்தைவிடக் குறைந்திருந்தால் இவர்கள் தங்களுடைய சுபயோகத்தை ஜாதகரின் ஆயுளின் முந்திய பாகத்தில் கொடுப்பார்கள். இவர்களுடைய ஸ்புடமானது சூரியனுடைய ஸ்புடத்தைவிட அதிகமானதாயிருந்தால் இவர்கள் தங்களுடைய சுபயோகத்தை ஜாதகரின் ஆயுளின் பிந்திய பாகத்தில் கொடுப்பார்கள்.

(2) சூரியனும் சந்திரனும் ஒருவரை யொருவர் நல்ல பார்வையுடன் பார்த்தால் சுபயோகமுண்டு.

(4) சூரியனையாவது சந்திரனையாவது குரு நல்ல பார்வையுடன் பார்த்து, இந்தச் சூரியனையாவது சந்திரனையாவது சனி, யுரேனெஸ், நெப்த்யூன் இவர்கள் கெட்ட பார்வையுடன் பார்க்காமலிருந்தால் சுபயோகமுண்டு.

(5) சுக்கிரன் 2-வது பாவத்திலிருந்து நல்ல பார்வையைப் பெற்றால் சுபயோகத்தைக் கொடுப்பார்.

(6) செவ்வாய் இண்டாவது பாவத்திலிருந்து நல்ல பார்வையைப் பெற்றால் சுபயோகத்தைக் கொடுப்பார், கெட்ட பார்வையைப் பெற்றால் அவயோகத்தைக் கொடுப்பார், ஜாதகர் ஏழையாயிருப்பார்.

(7) புதனைச் சுக்கிரனாவது குருவாவது நல்ல பார்வையுடன் பார்த்தால் சுபயோக முண்டு. புதனைச் செவ்வாய் சுபபார்வை யுடன் பார்த்தால் சுபயோகமுண்டு.

(8) சந்திரன் 2-வது பாவத்திலிருந்து நல்ல பார்வையை அடைந்து குரு லக்கினத்தில் வலிவாய் இருந்தால் ஜாதகருக்குச் சுபயோகமுண்டு.

(9) இரண்டாவது பாவத்தைச் சுக்கிரனாவது குருவாவது பார்த்தால் சுபயோக முண்டு.

(10) சந்திரனாவது, குருவாவது, சுக்கிரனாவது இராகுவுடன் இரண்டாவது பாவத்தில் இருந்தால் சுபயோக முண்டு.

(11) இராகுவும் புதனும் சம்மந்தப்பட்டால் ஜாதகருக்குத் தன் மனைவி மூலமாய்ச் சுபயோக முண்டு.

(12) குருவும், சுக்கிரனும், இராகுவும் ஏழாம் பாவத்தி லிருந்தால் ஜாதகருக்கு மனைவி மூலமாய்ச் சுபயோகமுண்டு.

(13) எட்டாவது பாவாதிபதி இரண்டாவது பாவத்தி லிருந்து நல்ல பார்வையைப் பெற்றால் ஜாதகருக்கு விவாக மூலமா வது அல்லது மரண சாசன பொருள் கொடை மூலமாவது சுப யோகமுண்டு, கெட்ட பார்வையைப் பெற்றால் தரித்திரமும் அவ யோகமு முண்டு,

(14) குரு அதிருஷ்ட இருதயத்துடன் இருந்து, கேந்திரத்தி லிருந்து சந்திரனுடைய நல்ல பார்வையைப் பெற்றால் அதிக சுப யோகத்தைக் கொடுப்பார்.

(15) புதன் அதிருஷ்ட இருதயத்தை நல்ல பார்வையுடன் பார்த்தால் சுபயோகத்தைக் கொடுப்பார்.

(16) புதனுக்குச் சந்திரனுடைய நல்ல பார்வை அல்லது சூரியனுடைய நல்ல பார்வை யிருந்தால் புதன் சுபயோகத்தைக் கொடுப்பார்.

(17) சுக்கிரன் லக்கினத்திற்குக் கேந்திரத்தி லிருந்தாலும், நல்ல பார்வையைப் பெற்றாலும் சுபயோகத்தைக் கொடுப்பார்.

(18) சூரியன், சந்திரன், அதிருஷ்ட இருதயம் ஆகிய இவை கள் கேந்திரத்திலிருந்தாலும், ஒருவரை யொருவர் நல்ல பார்வை யுடன் பார்த்துக்கொண்டாலும் சுபயோகமுண்டு.

(19) சுபக் கிரகங்கள் பாவக் கிரகங்களைவிட அதிகமாய் லக்கினத்திற்குக் கேந்திரத்திலிருந்தால் சுபயோக முண்டு.

(20) சுபக்கிரகங்கள் பாவக் கிரகங்களைவிட அதிகமாய் 1, 10, 11-வது பாவத்திலிருந்தாலும் சுபயோகமுண்டு.

(21) குரு, சுக்கிராள் வலிவாக இருந்து சூரியனுடைய நல்ல பார்வையையாவது சந்திரனுடைய நல்ல பார்வையையாவது பெற்றால் ஜாதகர் பிதுரார்ஜித சொத்து மூலமாகவாவது தன் சுயார்ஜித சொத்து மூலமாவது தனவந்தனுவார்.

(22) சுபக் கிரகங்கள் 1, 2, 9, 10, 11, 12-வது பாவங்களில் இருந்தால் சுபயோகமுண்டு.

(23) சூரியனும் சந்திரனும் 1, 2, 9, 10, 11, 12-வது பாவங்களில் இருந்தால் சுபயோகமுண்டு.

(24) சூரியன், சந்திரன், குரு, சுக்கிரன் இவர்கள் பாதாளத்தில் இல்லாமல் ஆகாயத்தில் பிறக்கும்போது இருப்பது சுபயோகத்தைத் தரும்.

(25) சூரியனுவது சந்திரனுவது, குருவாவது 2, 10-வது பாவத்திலிருந்தால் சுபயோகமுண்டு. இவர்கள் ஒருவரை யொருவர் நல்ல பார்வையுடன் பார்த்துக்கொண்டாலும் சுபயோகமுண்டு.

## அவயோகங்கள் (அசுப யோகங்கள்)

அயிட்டம் நே. 12:

(1) இரண்டாவது பாவத்திலிருக்கப்பட்ட கிரகம் கெட்ட பார்வையைப் பெற்றால் அவயோகத்தைக் கொடுக்கும்.

(2) கேது இரண்டாவது பாவத்திலிருந்தால் அவயோகத்தையும், தரித்திரத்தையும் கொடுக்கும், திருடாலும் பணம் நஷ்டமாகும்.

(3) இரண்டாம் பாவம் கெட்ட பார்வையைப் பெற்றாலும் இரண்டாம் பாவாதிபதி அஸ்தமனமா யிருந்தாலும் அவயோக முண்டு.

(4) லக்கின பாவாதிபதி 2, 12-வது பாவத்தில் வக்கிரகெதியிலிருந்து எட்டாவது பாவத்தில் சந்திரனிருந்தால் சாகச வியாபாரத்தினுலும், குதிரைப் பந்தயம் முதலியவை போன்றவைகளில் காசு பந்தயங் கட்டி ஆடுவதினுலும் திரவிய நஷ்டமுண்டு, அவயோகமுண்டு.

(5) இரண்டாம் பாவாதிபதி கெட்ட ஸ்தானத்தில் இருந்தும் அல்லது கெட்ட பார்வையை அடைந்தும் குரு வக்கிர கெதியில் ஆறும் பாவத்திலிருந்தாலும் அவயோகம், தரித்திர முண்டு.

(6) ஆகாயத்தைவிட பாதாளத்தில் கிரகங்கள் அதிகமாக விருந்தால் அவயோகமுண்டு.

(7) சனி, செவ்வாய் இவர்கள் கூடி நான்காவது பாவத்தி லிருந்து குருவினுடைய நல்ல பார்வையைப் பெருமலிருந்தால் சதா காலமும் தரித்திரமும் அவயோகமும் உண்டு.

(8) சூரியனும் சந்திரனும் ஒருவரை யொருவர் கெட்ட பார்வையுடன் பார்த்துக்கொள்ளும்போது சனி இரண்டாவது பாவத்திலிருந்து சூரியனையாவது சந்திரனையாவது அல்லது இவர் கள் இருவரையாவது கெட்ட பார்வையுடன் பார்த்தால் ஜாதக ருக்குத் தரித்திரமும் அவயோகமும் உண்டு.

(9) செவ்வாய், அல்லது சனி அல்லது யூரேனெஸ் அல்லது நெப்த்யூன் இவர்கள் சூரியனையாவது சந்திரனையாவது அல்லது இவர்கள் இருவரையுமாவது கெட்ட பார்வையுடன் பார்த்து ஐந் தாவது பாவத்தில் இந்த பாபிகளாவது சூரியனுவது சந்திரனுவது இருந்தால் சாகச வியாபாரத்தாலும், அசல் (முன்பணம்) வைத்து வியாபாரஞ் செய்வதாலும் பெருத்த நஷ்டம். அவயோகமுண்டு.

(10) சூரியனும், சந்திரனும் ஒருவரை யொருவர் கெட்ட பார்வையுடன் பார்த்துக்கொண்டால் அவயோகமுண்டு.

(11) சந்திரன் சனியினுடைய கெட்ட பார்வையையடைந்து குருவினுடைய நல்ல பார்வையை அடையாமலிருந்தால் அவயோக மும் தரித்திரமும் உண்டு, திரவிய நாசமு முண்டு.

(12) குருவானவர் சூரியனுடைய அல்லது சந்திரனுடைய கெட்ட பார்வையைப் பெற்ருல் தாராளமாக வீண் செலவு செய்வ தால் தரித்திரம் உண்டாகும், அவயோகம் உண்டாகும்.

(13) குருவுக்கு 7-வது பாவத்தில் சந்திரன் இருந்தால் தாராளமாய் வீண் செலவு செய்வதால் தரித்திரமும் அவயோக மும் உண்டாகும்.

(14) சூரியனுவது சந்திரனுவது செவ்வாயினுடைய கெட்ட பார்வையை அடைந்தால் அவயோகமுண்டு. ஆனுல் சூரியனையாவது சந்திரனையாவது குரு அல்லது சுக்கிரன் நல்ல பார்வையுடன் பார்த்தால் இந்த அவயோகம் குறைந்து ஜாதகர் சௌக்கிய மடைவர்.

(15) புதன் யூரேனெஸ்ஸின் கெட்ட பார்வையை அடைந் தால் ஜாதகர் பொதுஜன சங்கங்களாலும், எதிர்பாராத தற்செயல் சம்பவங்களாலும் அதிக நஷ்டத்தை அடைவர், வியாபாரத்திலும் நஷ்டமுண்டாகும்.

(16) செவ்வாயாவது சனியாவது கேந்திரத்திலிருந்தால் அவ யோகமுண்டு.

(17) சனியும் சந்திரனுங் கூடி கேந்திரத்திலிருந்தால் அதிக அவயோகமுண்டு. இவர்களைக் குரு நல்ல பார்வையுடன் பார்த் தால் இந்த அவயோகம் குறையும்.

சூரியனும் சந்திரனும் இரண்டாவது பாவத்திலிருந்து சந்தி ரன் அஸ்தங்கதமாயிருந்தால் அவயோக முண்டு.

(18) சூரியனும் சந்திரனும் கெட்ட பார்வையை யடைந்து 3, 6-வது பாவங்களிலிருந்தால் அவயோகமுண்டு.

அயிட்டம் நெ. **13:**

(1) குரு, மிதுனம், தனுசு, மீனம் இவைகளில் 7-வது பாவத்திலிருந்து சந்திரனுடைய நல்ல பார்வையைப் பெற்றால் ஜாதகர் சுவீகாரம் (தத்து) போய் அதனால் செல்வத்தை அடைவர்.

(2) புதன் குருவினுடைய சமாகமப் பார்வை அல்லது திரிகோணப் பார்வை அல்லது சட்கோணப் பார்வையைப் பெற்றால் ஜாதகர் தன் வித்தையாலும், புத்தகங்களும் பத்திரிகைகளும் எழுதுவதாலும், தத்துவஞானம், வேதாந்தம் சித்தாந்தம் இவைகளாலும் அதிக சுபயோகத்தை உடையவராவர்,

(3) புதன் சுக்கிரனுடைய சமாகமப் பார்வை அல்லது சட்கோணப் பார்வையைப் பெற்றால் ஜாதகர் வித்தையாலும், சங்கீதத்தாலும் அதிக சுபயோகமுடையவராவர்.

(4) புதன் செவ்வாயினுடைய திரிகோண பார்வை அல்லது சட்கோணப் பார்வையைப் பெற்றால் ஜாதகர் வக்கில், பாரிஸ்டர், லாயர், பத்திரிகாசிரியர் இராஜ்ய நிர்வாகத் தந்திரி ஆகிய இத்தொழிலால் அதிக சுபயோக முடையவராவர்.

(5) செவ்வாய் லக்கினத்திலிருந்து சனியினுடைய கெட்ட பார்வையை அடைந்தால் ஜாதகன் அவயோகத்தை அடைந்து தற்கொலை செய்து கொள்ள எத்தனிப்பான்.

குறிப்பு:—சுபயோகங்களையும் அவயோகங்களையும் ஒரு ஜாதகத்தில் தனித் தனியாய்ப் பார்த்துக் கவனிக்கும்போது மொத்தத்தில் சுபயோகங்கள் அவயோகங்களைவிட அதிகமாக இருந்தால் ஜாதகர் நல்ல யோகமுடையவராயும் செல்வாக்கும் தனமுமுடையவராய் இருப்பார் என்றும் யூகிக்கவும். அவயோகங்கள் சுபயோகங்களைவிட அதிகமாய் இருந்தால் ஜாதகர் கெட்ட யோகமுடையவராய்த் திரவியமில்லாமலும் செல்வாக்கில்லாமலும் தரித்திரராய் இருப்பார். சுபயோகங்களும் அவயோகங்களும் சமமாகவிருந்தால் ஜாதகர் தனவந்தராகவும் தரித்திரராகவுமில்லாமல் சமமான அந்தஸ்து உடையவராக இருப்பார் என்று யூகிக்கவும்.

## அந்தஸ்து, அதிகாரம், சாயக்கால், செல்வாக்கு.

அயிட்டம் நெ. **14.** (1) பாதாளத்தைவிட ஆகாயத்தில் ஜெனன காலத்தில் அதிக கிரகங்கள் வலிவுடன் இருந்தால் ஜாதகர் அந்தஸ்தும் அதிகாரமும் உடையவராவர்.

(2) சூரியனும் சந்திரனும் மேஷம் கடகம் துலாம், மகரம் இவைகளில் கேந்திரத்திலிருந்தால் ஜாதகர் அஸ்தஸ்தும் அதிகாரமு முடையவராவர்.

(3) சுபக் கிரகங்கள் கேந்திரத்திலிருந்து சூரியன் சந்திரன் இவர்களுடைய நல்ல பார்வையைப் பெற்றால் ஜாதகர் அஸ்தஸ்தும் அதிகாரமும் பேரும், புகழும், கீர்த்தியும் உடையவராவர்.

(4) சூரியனும் சந்திரனும் அதிக பாதாளத்திலிருந்து பாபர்களால் கெட்ட பார்வையுடன் பார்க்கப்பட்டு சுபக்கிரகங்கள் கேந்திரத்திலிராமலிருந்தால் ஜாதகர் அதிக தாழ்ந்த நிலையிலும் தரித்திரியுமாயுமிருப்பார்.

(5) சூரியனும் சந்திரனும் ஆண் ராசியிலிருத்தலும், கேந்திரங்களிலிருத்தலும், நல்ல பார்வையைப் பெறுதலும், இரவில் பிறந்தவர்களுக்குச் சந்திரன் கேந்திரத்திலிருத்தலும், பகலில் பிறந்தவருக்குச் சூரியன் கேந்திரத்திலிருத்தலும், சூரியனும் சந்திரனும் ஒருவரை யொருவர் நல்ல பார்வையுடன் பார்த்துக் கொள்வதும், பத்தாம் பாவத்தில் சூரியனும் சந்திரனும் இருத்தலும் அல்லது பத்தாம் பாவத்தைச் சூரியனும் சந்திரனும் நல்ல பார்வையுடன் பார்ப்பதும் ஜாதகருக்கு நல்ல அந்தஸ்தையும் அதிகாரத்தையும் செல்வாக்கையும் கொடுக்கும்.

(6) குரு பத்தாம் பாவத்திலிருந்து சந்திரனுடைய திரிகோணப் பார்வையைப் பெற்று, சூரியன் சந்திரனுடைய சட்கோணப் பார்வையைப் பெற்ருல் ஜாதகர் நல்ல அந்தஸ்தும் அதிகாரமும் அடைவார்.

(7) சூரியன் கடகத்திலிருக்கும்போது சந்திரன் விருச்சிகத்தில் குருவுடன் இருந்தாலும் அல்லது சந்திரன் குருவினுடைய திரிகோணப் பார்வையை யடைந்தாலும் ஜாதகர் நல்ல அந்தஸ்தும் அதிகாரமும் அடைவார்.

(8) சந்திரன் லக்கினத்திலிருந்து குரு, சுக்கிரன், சூரியன் இவர்களுடைய திரிகோணப் பார்வை அல்லது சட்கோணப் பார்வையை அடைந்தால் ஜாதகர் நல்ல அந்தஸ்தும் அதிகாரமும் அடைவார்.

(9) லக்கினுதிபதி சூரியனுடைய திரிகோண பார்வை அல்லது சட்கோணப் பார்வை பெற்றுக் கிழக்குப் பாகத்திலிருந்தால் ஜாதகர் நல்ல அந்தஸ்தும் அதிகாரமும் பெறுவார்.

(10) குருவும் சுக்கிரனும் பத்தாம் பாவத்திலிருந்து நல்ல பார்வையை யடைந்தால் ஜாதகர் நல்ல அந்தஸ்தும் அதிகாரமும் அடைவார்.

(11) சனியும், யூரேனெஸ்னும் பத்தாம் பாவத்திலிருந்து நல்ல பார்வையை யடைந்தால் ஜாதகர் முதலில் நல்ல அந்தஸ்தையும் அதிகாரத்தையும் அடைந்து பிறகு கேவலமான தாழ்ந்த நிலைக்கு வந்து விடுவார்.

(12) சூரியனும் குருவும் பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகருக்கு நல்ல அந்தஸ்தும் அதிகாரமு முண்டாகும், ஆனுல் இவர்களைச் செவ்வாயும் சனியும் சதுர்கோணப் பார்வையுடனுவது அல்லது எதிரிடைப் பார்வையுடனுவது பார்த்தால் இந்த அந்தஸ்தும் அதிகாரமும் திடீரென்று அழிந்து போய்விடும்.

(13) சூரியன் லக்கின பாவத்திலும், சந்திரன் ஒன்பதிலும், புதன் பன்னிரண்டிலும், குரு இரண்டிலும், சுக்கிரன் பதினெுன்

றிலும் இருத்தல் ஜாதகருடைய நல்ல அந்தஸ்தை அதிகப் படுத்தும்.

(14) சூரியன் அல்லது பத்தாம் பாவாதிபதி சந்திரனுடைய அல்லது சனியினுடைய கெட்டப் பார்வையைப் பெற்றால் ஜாதகருடைய அந்தஸ்து குறைந்து விடும்.

(15) பத்துக்குடையவரும், சூரியனும் சந்திரனும் ஒருவருக்கொருவர் திரிகோணத்திலிருந்தால் ஜாதகருக்கு நல்ல அந்தஸ்துண்டாகும்.

(16) சூரியனும் செவ்வாயும் மேஷத்திலிருந்தாலும், சூரியனும் குருவும் தனுசிலிருந்தாலும், சூரியனும் சுக்கிரனும், சிம்மத்திலிருந்தாலும் ஜாதகருக்கு நல்ல அந்தஸ்து உண்டாகும்.

(17) சந்திரனை லக்கினாதிபதி பத்தாம் பாவாதிபதிகள் நல்ல பார்வையுடன் பார்த்தாலும் ஜாதகருக்கு நல்ல அந்தஸ்து ஏற்படும்.

# அநுபந்தம் நெ. 1.

## மேல்நாட்டு ஜோதிட சாயனரீதியாய்ப் பார்க்கும் மதத்தின் பிரகாரம் சில முக்கியமான போது விஷயங்கள்.

அயிட்டம் நெ. (1) கிரகங்களின் பெயர் :—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது, யூரேனெஸ், நெப்த்யூன்.

நெ. (2) இராசிகளின் பெயர் :—மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விரிச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்.

நெ. (3) மேஷம், கடகம், துலாம், மகரம் இவை சரராசிகள்; ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் இவைகள் ஸ்திரராசிகள்; மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இவைகள் உபயராசிகள் ஆகும்.

நெ. (4) மேஷம், சிம்மம், தனுசு இவைகள் அக்கினி (தேயு) ராசிகள்; ரிஷபம், கன்னி, மகரம் இவைகள் பூமி ராசிகள்; மிதுனம், துலாம், கும்பம் இவைகள் வாயு இராசிகள்; கடகம், விருச்சிகம், மீனம் இவைகள் ஜல (அப்பு) இராசிகள் ஆகும்.

நெ. (5) மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய ஒற்றை ராசிகள் ஆண் ராசிகள்; ரிஷபம். கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய இரட்டை ராசிகள் பெண் ராசிகள் ஆகும்.

நெ. (6) மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, இவைகள் உத்தரவீதி (வடக்கு) ராசிகள்; துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் இவைகள் தக்ஷிணவீதி (தெற்கு) ராசிகள் ஆகும்.

## நெ. 7. கிரகங்களும் அவைகளின் சத்துரு மித்துருக்களும்.

| கிரகங்கள் | | மித்துருக்கள் | சத்துருக்கள் |
|---|---|---|---|
| சூரியன் | (சூ) | சந், அ, பு, கு, சு | சனி |
| சந்திரன் | (சந்) | சூ, பு, கு, சு | அ, சனி |
| அங்காரகன் | (அ) | சு | சூ, சந், பு, கு, சனி |
| புதன் | (பு) | சூ, சந், கு, சு, சனி | அ |
| குரு | (கு) | சூ, சந், பு, சு, சனி | அ |
| சுக்கிரன் | (சு) | சூ, சந், அ, பு, கு | சனி |
| சனி | (ச) | சூ, சந், பு, கு | அ, சு |

## நெ. 8. கிரகங்களும் அவைகளின் ஆட்சி, உச்ச, நீச்ச ராசிகளும்.

| சாயன ராசிகள் Rasi | ஆட்சி வீடுகள் Own House பலம் 1 | உச்ச வீடுகள் Exaltation பலம் $\frac{3}{4}$ | நீச்ச வீடுகள் Debilitation பலம் $\frac{1}{4}$ | நிர்பல வீடுகள் Detriment பலம் 0 |
|---|---|---|---|---|
| மேஷம் | செவ்வாய | சூரியன் | சனி | சுக்கிரன் |
| ரிஷபம் | சுக்கிரன் | சந்திரன் | யூரேனெஸ் | செவ்வாம் |
| மிதுனம் | புதன் | ராகு | கேது | குரு |
| கடகம் | சந்திரன் | குரு | செவ்வாய் | சனி |
| சிம்மம் | சூரியன் | — | — | யூரேனெஸ் |
| கன்னி | புதன் | புதன் | சுக்கிரன் | குரு |
| துலாம் | சுக்கிரன் | சனி | சூரியன் | செவ்வாய் |
| விருச்சிகம் | செவ்வாய் | யூரேனெஸ் | சந்திரன் | சுக்கிரன் |
| தனுசு | குரு | கேது | ராகு | புதன் |
| மகரம் | சனி | செவ்வாய் | குரு | சந்திரன் |
| கும்பம் | சனி | — | — | சூரியன் |
| மீனம் | குரு | சுக்கிரன் | புதன் | புதன் |

## நெ. 9. கிரகங்களின் காரகங்கள்.

சூரியன் :—ஜீவன், வலிவாயிருக்கும்போது பெருமை, கீர்த்தி, கௌரவம், தயாள குணம், நல்ல சினேகிதன், தயாள குணமுள்ள எதிரி, ஆடையின் மீது ஆசை ஆகும். பலவீனமாய் இருக்கும் போது வீண்டம்பம், தயாள குணமில்லாமை. மஞ்சள் நிறம்.

சந்திரன் :—கபம், திரிச்சல், வலிவாய் இருக்கும்போது அதைரியம், வீண் செலவு, சாஸ்திரங்களின் பேரில் ஆசை, புதிய வஸ்துக்களின் பேரில் ஆசை ஆகும். வலிவில்லாமல் இருக்கும்போது குடித்தல், சோம்பல், தரித்திரம், வீணாகத் திரிதல். பலவித வர்ணம்.

செவ்வாய் :—வலிவாய் இருக்கும்போது கோபம், போர், சத்துருத்துவம், தற்செயல் சம்பவம், தைரியம், வீரத்தன்மை ஆகும். பலவீனமாய் இருக்கும்போது துர்குணங்கள், நம்பிக்கைத் துரோகம், திருடு, கொடுமை ஆகும். சிகப்பு நிறம்.

புதன் :—வலிவாயிருக்கும்போது யுக்தி, புத்தி, சிற்ப வேலையில் திறமை, அச்சம், கோபம், வாதாடுந் திறமை, வெளி தேசசஞ்சாரம். பலவீனமாய் இருக்கும்போது வாக்குச் சாதுர்யம், கடினமாக எழுதுதல், பேசுதல், பொய், கோள் சொல்லுதல். நீல நிறம்.

குரு:—வலிவாயிருக்கும்போது தானம், கம்பீரம், வீண்டம்பம், நல்ல குணம், நல்ல ரூபம், சம்பத்து, தனம், தரும சிந்தை, உற்சாகம், நற்காரியங்களைச் செய்தல் பெருந்தன்மை, நன்மார்க்கம், நன்றி பாராட்டல், கீர்த்தி, பட்டம் பெறுதல், கடவுள் பக்தி, தர்மகுணம், சிக்கினம் செல்வாக்கு ஆகும். வலிவில்லாமலிருக்கும்போது சோம்பல், பொருமை, துர்குணங்கள், மத விரோதம், பிதுரார்ஜித சொத்து நாசம் ஆகும். சிகப்பும் பச்சையும் கலந்த நிறம்.

சுக்கிரன்:—வலிவாயிருக்கும்போது அழகு, நற்குணங்கள், சுகபோகங்களைக் கோருதல், சம்பத்து, தனம், சுகம், செல்வாக்கு, நியாயம், சங்கீதம். வலிவில்லாமலிருக்கும்போது சோம்பல், விபசாரம், காமவெறி, வெட்கமின்மை, மதுபான இச்சை. வெள்ளை நிறம்.

சனி:—வலிவாய் இருக்கும்போது அடக்கம், பொறுமை, சாந்தம், தீர்க்கமாய் ஆலோசித்தல், உழைப்புத் தனம், கஷ்டப்பட்டு வேலை செய்து காரியத்தை முடித்தல், நல்ல சினேகிதனுயிருத்தல் ஆகும். வலிவில்லாமலிருக்கும்போது நம்பிக்கைத் துரோகம், பொருமை, சோம்பல் அவநம்பிக்கைப்படுதல், சந்தேகப்படுதல், பெண்களைத் தூஷித்தல், பொய் சொல்லுதல், துன்மார்க்கக் குணம், துக்கம், துன்பம், அவமானம் கருப்பு நிறம் ஆகும்.

யூரேனெஸ் :—வலிவாயிருக்கும்போது விசித்திரமான செய்கை, நூதனமான செய்கை, புதியதாய்க் கண்டு பிடித்தல் எதிர்பாராமல் திடீரென்று லாபம். வலிவில்லாமலிருக்கும்போது எதிர்பாராத திடீரென்ற நஷ்டமும் கெடுதியும்.

நெப்த்யூன்:-மதத்தின் பேரில் ஆசை, ஏமாற்றுதல், யோக நிலை.

## நெ. 10. துவாதச பாவங்களின் காரகங்கள்.

**1**-வது பாவம் :—தேகத்தின் உருவம், நிறம், குணம், தேக சௌக்கியம், குணாதிசயங்கள், சிரசு.

**2**-வது பாவம் :—தொண்டை; செல்வம். சொத்து, பச்சை நிறம், தனம், தரித்திரம், சம்பத்து, லாபம், நஷ்டம்.

**3**-வது பாவம் :—சகோதரன், சகோதரி, புஜம், கை, பந்துக்கள், சுற்றுப் பக்கமுள்ள ஊர்களுக்குப் பிரயாணம், சிகப்பும் மஞ்சளும் கலந்த நிறம்.

**4**வது பாவம் :—தகப்பன், நிலம், வீடு, பிதுரார்ஜிதம், மார்பு, வயிறு, நுரையீரல் (Lung) விருத்தாப்பியத்தில் ஜாதகன் இருக்கும் ஸ்திதி, சிவப்பு நிறம், சுரங்கம்.

**5**-வது பாவம் :—சந்ததி, இன்பம், சாகச வியாபாரம், சூதாட்டம், கேளிக்கை விலாசம், பள்ளிக்கூடம், மண்ணீரல் (Liver) முதுகு, இருதயம், தகப்பனுடைய தனம், கறுப்பும் வெள்ளையும் கலந்த நிறம்.

**6**-வது பாவம் :—வியாதி, வேலையாட்கள், ஆடு மாடுகள், தகப்பனுடைய பந்துக்கள், தன் குடித்தனக்காரர்கள், குடல், வயிறு, கறுப்பு நிறம், ஆடைகள்.

**7**-வது பாவம் :—விவாகம், களத்திரம் அல்லது புருஷன், பகிரங்கமான விரோதி, பொதுஜன ஆபீசுகள், வியாஜ்ஜியம், மூத்திரக் குண்டிக் காய்கள் (Kidneys) கறுப்பு நிறம்.

**8**-வது பாவம் :—மரணம், மரண சாசனப் பொருள் கொடை (Legacy), இடுப்பு, பச்சை, கறுப்பு நிறங்கள், மனைவியின் அல்லது புருஷனின் சொத்து, நஷ்டம், வியாபாரக் கூட்டாளியின் தனம், சிசுனம், ஆசனம்.

**9**வது பாவம் :—மதம், நிலத்தின் பேரில் அல்லது சமுத்திரத்தின் பேரில் செய்யும் நீண்ட பிரயாணம், கோயில், புரோகிதன், சட்ட சம்மந்தமான விஷயங்கள், துடைகள், இடுப்பு, கினவு, மனைவி அல்லது புருஷனுடைய பந்துக்களின் விஷயங்கள், பச்சை, வெள்ளை நிறங்கள், சாஸ்திர பரிசீலனைகள்.

**10**-வது பாவம் :—ஜீவனம், உத்தியோகம், வியாபாரம், லாவாதேவி, கௌரம், கீர்த்தி, அபகீர்த்தி, தாய், முழங்கால்கள், சிகப்பு வெள்ளை நிறங்கள், எஜமானன், தனக்கு மேற்பட்ட உயர்ந்த உத்தியோகஸ்தன்.

**11**-வது பாவம் :—சிநேகிதர், வியாபார மூலம் வரும்படி, கால்கள், கணுக்கால்கள், தாயினுடைய சொத்துக்கள்.

**12**-வது பாவம் :—ரகசியமான விரோதிகள், ஜெயில் தண்டனை, துக்கம், எருது, ஆஸ்பத்திரி, சுவதேசத்தைவிட்டு ஓடிப்போதல், அடைக்கலம் புகுமிடங்கள், தகப்பனுடைய சகோதர சகோதரிகள், பாதங்கள், மனக்கவலை, கஷ்டம், நம்பிக்கைத் துரோகம், தற்கொலை, துர்அதிர்ஷ்டம் பல சங்கட்டங்கள், பச்சை நிறம்.

## நெ. 11. இராசிகளின் காரகங்கள்.

*1*-வது பாவம் முதல் *12*-வது பாவம் வரையிலுமுள்ள பாவங்களுக்குச் சொல்லப்பட்ட காரகங்களையே மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள ராசிகளுக்கு முறையே காரகங்களாகப் பாவித்துக் கொள்ளவும். அதாவது 1-வது பாவத்திற்குச் சொல்லிய காரகங்களே மேஷ ராசியின் காரகங்கள் ஆகும். 12-வது பாவத்திற்குச் சொல்லிய காரகங்களே மீன ராசிக்குரிய காரகங்களாகும். இவ்விதமாகவே மற்ற ராசிகளுக்கும் காரகங்களைத் தெரிந்து கொள்ளவும்.

முற்றிற்று.